
# மனப்பூக்கள்

(கவிதைத்தொகுதி)



செ. திருநாவுக்கரசு

M.29.3A

"KALAA BOOSHANAM"
K.S.SIVAGNANAMUDAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# மனப்பூக்கள்

(கவிதைத் தொகுதி)

செ.திருநாவுக்கரசு

**மனப் பூக்கள் + கவிதை + ஆசிரியர் : செ. திருநாவுக்கரசு, 15, பண்டாரக்குளம் வீதி, நல்லூர் + பதிப்புரிமை : திருமதி. விஜய லட்சுமி திருநாவுக்கரசு + முதற்பதிப்பு: மே 2018 + பக்கங்கள்: 95+9 + வடிவமைப்பு : சூ. சஞ்சீவ்காந்த் + அட்டைப்படம்: நல்லூர் எம். வி. கிறபிக்ஸ் நிறுவனம் + அச்சுப்பதிப்பு : ஜே. எஸ். பதிப்பகம், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.**

**விலை : ரூ. 250.00**

Mana Pookkal + collection of Poems + Author : S.Thirunavukkarasu, 15, Pandarakulam Road, Nallur + Copyrigh : Mrs. Vijayaledchumy Thirunavu karasu + First Edition : May 2018 + Pages : 95 +9 + Layout : S.Sanjeev Kanth + Cover Painting : M.V.Graphics institute + Printing : J.S.Printers, Sillalai Road, Pandatheruppu.

Price : Rs.250.00

ISBN : 978-955-52960-9-0

# நன்றிக்குரியவர்கள்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADITYAPATHAM ROAD
KOKUVIL WEST


அணிந்துரை வழங்கிப் பெருமைப்படுத்திய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

நூலினை வடிவமைத்துத்தந்த கோண்டாவில் திரு சூ.சஞ்ஜீவ்காந்த்

அட்டைப்படம் ஒழுங்கமைத்துத் தந்த நல்லூர் எம்.வி. கிறபிக்ஸ் நிறுவனத்தினர்

அச்சில் அழகுற நூலாக வெளிக்கொணர்ந்த சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு எனும் முகவரியில் இயங்கும் ஜே.எஸ்.பதிப்பக உரிமையாளரும், ஊழியர்களும்

சுதந்திரன், வலம்புரி, உதயன், கலைமுகம், கலைமலர், அருள்ஒளி, சிவபூமி முதியோர் இல்லப் பத்தாவது ஆண்டுச் சிறப்பு மலர் ஆகிய ஏடுகளின் வெளியீட்டாளர்கள்



# அணிந்துரை



எமது இனிய நண்பர் பண்டிதர், கலாநிதி செ.திருநாவுக் கரசு அவர்களின் **மனப்பூக்கள்** என்னும் கவிதைத் தொகுதியைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. வரன்முறையான தமிழ்க் கல்வி யூடு பண்டிதராகிய திருநாவுக்கரசு பல்கலைக்கழக வழிவரும் பீ.ஏ, எம்.ஏ, பி.எச்.டி ஆகிய பட்டங்களை யும் பெற்று 'இருமரபுந் துய்ய' தமிழ்ப் புலவ ராகத் திகழ்கின்றார்.

கலை, கவிதை, இலக்கியம் முதலியன கிராமச் சூழலிலேதான் பெரும்பாலும் ஊற்றெடுக்கின்றன என்பர். கிராமியச் சூழலை நன்கு அனுபவித்தவர்களின் படைப்பு களிலே ஒருவித உயிர்ப்பு இருப்பதை அவதானிக்கலாம்.

திருநாவுக்கரசு அழகான கிராமத்திலே பிறந்து வளர்ந்தவர். குன்றா உழைப்பும், குறையா ஊக்கமும் உடையவர். ஓயாமற் படிப்பவர். ஒழுங்காகப் படிப்பிப்பவர். இவர் ஆசிரியராக, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரை யாளராக, பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளராக, சிறந்த ஆய்வாளராக உச்சத்தைத் தொட்டவர். ஆய்வு மாண வர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அவர் விளங்கியவர். பெறுமதி மிக்க பாடநூல்களை எழுதியவர். பழகுதற்கு இனிமையும், பண்பும் கொண்ட பண்டிதர் திருநாவுக்கரசு அவர்களின் 'ஒரு முகம்' கவிதைத் துறையாகும். (இனிவரும் இடங்களிலே திரு என்றே அழைப்போம்).

திரு சில சிறுகதைகளும் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்பரிமாண ஆளுமைகொண்ட திருவின் கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இக்கவிதைத் தொகுதி "அற்றைத் திங்கள் அவ்

வெண் நிலவில்" தொடங்கிச் "சாந்திகப் பேரொளியே" என்பதுடன் நிறைவு பெறுகின்றது. இந்தக் கவிதைத் தொகுப்பின் தலைப்புக்களிலும் ஒரு தொடர்பு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. ஒருவித ஏக்கத்துடன் தொடங்கி ஒரு அமைதியை நாடுவதாக அமைந்திருப்பது தற்செயலான நிகழ்வென்று கூறமுடியாது.

இன்று கவிதைகளும் வருகின்றன. ஆங்காங்கே கவிதை என்ற பெயரிலே சில துணுக்குகளும் வருகின்றன. கவிதைக்குரிய வரைவிலக்கணத்தைச் சரியாக வரையறை செய்வது கடினம். 'உள்ளத்து உள்ளது கவிதை' என்று பாரதி கூறினான்.

கவிஞர் திருவின் கவிதைகள் இன்றைய கவிதை களின் போக்கில் இருந்து பலவகைகளிலே மாறிச் செல் கின்றன. 'சொல்லை இசைத்து'க் கவிசெய்ய வேண்டும் என்றும், அது ஓசையுடைத்தாய் அமைய வேண்டும் என்றும் பாரதி கூறினான். நவீன தமிழ்க் கவிதையின் மைற் கல்லா கவும், வழிகாட்டியாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிடும் பாரதி யின் வாக்குமூலங்களைப் புறந்தள்ளிவிட முடியாது. 'மந்திரச் சொல் இன்பம்' வேண்டும் என்றும், ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பம் என்றும், 'பாட்டினைப்போல் ஆச்சரி யம் பாரின் மிசை இல்லையடா' என்றும் கூறியவன் பாரதி.

மந்திர உச்சாடனத்தில் இருந்தே கவிதை தோன்றி யது என்று கூறுவாரும் உள்ர். ஒருவித ஓசை ஒழுங்கு மந்திர உச்சாடனத்தில் இருப்பதைக் காணலாம். கவிதைக்கும் ஓசை முக்கியமானது என்று கருதுபவன் யான். இந்த ஓசை ஒழுங்கையே முன்னோர் 'யாப்பு' என்று கூறினர் எனலாம். 'பா' என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை என்று உரையாசிரியர்கள் கூறுவர்.

கவிஞர் திருவின் கவிதைகளிலே சொற்கள், சொற்தொடர்கள் இசைவு பெற்று வருவதைக் காண முடிகின்றது. பொருளுக்கு ஏற்றவகையிலே சொற்களைத் தெரிவுசெய்து பொருத்தமுற அமைத்துச் செல்லும் கவிஞர் திரு நல்லதொரு கவிஞராகத் தம்மை இனங்காட்டியுள்ளார்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று சொல்வதில் எனக்கு உடன்பாடில்லை. கவிதை கவிதைதான். அதன்

வடிவுகொண்டு வகைப்படுத்துதல் பொருத்தமற்றது என்று கருதுகின்றேன்.

கவிஞர் திருவின் கவிதைகளைப் படிக்கும்பொழுது அறுபது, எழுபதுகளிலே கவிதையைப் படித்த நினைவு நிழலாடியது. அவ்வப்போது பாரதிதாசன் தலைகாட்டிச் சென்றார்.

கவிஞர் திருவின் இக்கவிதைத் தொகுப்பிலே சமூகச் செய்திகள், வாழ்த்துக்கள், வழிபாடுகள், இரங்கல்கள், பழைய நினைவுகள், உள்ளத்தைத் தொட்ட உணர்வுகள் எனப் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. சமூகப் பிரச்சினைகள் (அரசியலுட்பட) பலவற்றை ஆங்காங்கே வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கூறிச் செல்லு கின்றார். கவிஞரின் சமய சமரச நோக்கினை இக்கவிதைத் தொகுதியினூடு காணமுடிகின்றது. நல்லூர் முருகனையும் இயேசுநாதரையும் ஒரே கோட்டில் வைத்து நோக்குவது இவரது பரந்து விரிந்த பார்வையையே புலப்படுத்துகின்றது. சுனாமிச் சுவடுகள் நெஞ்சைத் தொடுகின்றன.

பக்தியை அல்லது கடவுளைப் பாடாத பெருங் கவிர்களே இல்லையெனலாம். கவிஞர் திருவுக்குள் ஒரு பக்திமான் இருக்கிறார் என்பதை இவரது பல கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆசிரியகலாசாலைப் பணியில் இருந்தமையால் தேவை நோக்கிப் பல வாழ்த்துப் பாடல்களைப் பாடியுள்ளார். தேவை நோக்கி எழுதினாலும் கவிதை சிறப்பாகவே அமைந்துள்ளமை கவிஞரின் கவித்துவ ஆளுமையையே காட்டுகின்றது.

இவரின் கவிதைகளிலே, சொல், பொருள், ஓசை, உவமை முதலியன ஒழுங்குபடச் செல்வதால் கவிதையைப் படிக்கிறோம் என்ற நிறைவு நமக்கு ஏற்படுகின்றது. தன்னுடைய ஊரையும் உறவையும் அந்த ஊரைவிட்டுப் பிரிந்த நிலையிலே நினைக்கும்பொழுது ஒருவித கவலை யோடு இனிமையும் கலந்து வெளிப்படுவது இயல்பானதே. இந்த உணர்வு நிலையை கண்ணீரும் புன்னகையும் கலந்து வருவதாகக் கவிஞர்கள் கூறுவர். கவிஞரின் நினைவுகளின் நீட்சியாக அமையும் "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்" என்ற கவிதையை உதாரணமாகச் சுட்டலாம்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**ஆடிக் களித்தேன் அன்னை பூமியில்**
**கற்றைக் குழலாள் கனிமொழி யருகில்**
**காதலும் கற்பும் கலந்திடும் நிலையில்**
**ஒற்றைப் பனைவளர் முற்றத் தழகில்**
**ஒசிந்திடும் முல்லைக் கொடிப்பூ மணத்தில்**
**எற்றைக்கு மழியா இன்பத் துய்ப்பில்**
**எல்லாச் சுகமும் இணைந்ததென் னிடத்தில்**

பழந்தமிழ்ப் பாட்டின் அடியொன்றினை அடியொற்றிக் கவிஞர் திரு படைத்த இந்தக் கவிதைத் தொடர் நெஞ்சைத் தொடுவதாக அமைந்துள்ளது. பத்துக் கவிதைகள் இத்தலைப்பிலே இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு விஷயத்தை வலியுறுத்திக் கவிஞரின் வலியை வருடுவதாகக் கொள்ளலாம்.

நாமும் நமது வீட்டையும், கிராமத்தையும், வாழ்வியலையும் நினைவுகூர இக்கவிதை வழிசெய்கிறது. இது கவிஞரின் வெற்றி; கவிதையின் வெற்றி.

கவிஞர் திருவின் கவித்துவ ஆற்றலைக் காட்ட மேற்காட்டிய ஒரு கவிதையைப் பதச்சோறாகக் காட்டினோம். இக்கவிதைத் தொகுதியினூடு, நமக்கு நல்லதொரு கவிஞர் கிடைத்திருக்கின்றார் என்ற எண்ணம் பலருக்கு உருவாகும். கவிதைகள் முழுவதையும் படித்து முடிய ஒரு நிறைவு உண்டாகின்றது.

கவிஞர் திருவுக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# உள்ளே.....

அணிந்துரை / *iv*
அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் / 1
எங்கள் தமிழ் வாழ்கவே / 5
சிந்தனை செய்யடா! / 7
ஓ யாழ்ப்பாண தேசமே! / 9
ஜீவ ஒளியின் வருகைக்காக... / 11
மண்ணில் பிறந்திட வாரும் / 15
நீ என்னைப் பாடச் சொல்லுகிறாய்! / 17
சாக்காட்டில் பூத்த நறுமுல்லையோ? / 19
இன்னும் இரங்கவில்லையா இறைவா? / 21
சுனாமிப் போர் / 23
இதயங்கள் எமக்காக வேண்டும் / 26
உலகம் போற்றும் உயர்வான் நபியே! / 28
மாதா சாரதா தேவி / 30
இலங்கை ஒரு பண்பாட்டுச் சோலை / 31
சிறுவர் உலகம் சிறுவருக்கே! / 33
என்றும் வாழ்கவே! / 35
நல்லாசிரியரைப் போற்றுவோம்! / 37
பெண்ணின் அடிமை விலங்கறுப்போம்! / 38
தமிழ்க்கவி பாரதி / 40
தேர்தல் நாடக மேடையில்... / 42
பகவான் புத்தரும் பாரினுக்கருளிய பலனோ? / 44
நல்லை ஆதீனம் / 45

"கலைமலர்" நின்புகழ் வாழ்க! / 46
பூமழை தூவி வாழ்த்திடுமே! / 48
ஒருபாடல் என்காதில் ஒலிக்கிறது! / 50
காந்தி தேசம் காட்டிய வழி / 51
வானுலகஞ் சென்றீரோ அம்மா? / 52
அல்லைப்பிட்டி கரண்டப்பாய் கந்தசுவாமி துதி / 53
மார்கழி கிறிஸ்மஸ் பெருநாள் / 54
கந்தனின் தேரோட்டம் / 56
யாரோடு பேச வந்தோம் முருகா? / 57
"வலம்புரி" நீடூழி வாழ்க! / 59
ஆஸ்பத்திரி தந்த அனுபவம் / 62
எ.டிலா இன்பமே வாழி! / 65
புத்தரைப் போற்றுதும்! / 69
குடமுழுக்கினால் உலகம் உய்யுமே! / 71
உன்னருள் கிடைத்தால் நாம் உய்வமே! / 75
முதியோரைக் காத்திடுவோம் / 77
கவியரங்கக் கவிதை / 79
கொழும்புத் தமிழ்ச்சங்கம் வாழியவே! / 85
செந்தமிழ் வீரமணியே! / 86
நெஞ்சே நீ ஆறுவாயோ? / 87
தாயும் நீயே! தந்தையும் நீயே! / 88
மாதுளுவவ சோபித தேரர் / 89
சிலையாக நீயிருக்கலாகுமோ? / 91
நிலவிடுக நினது புகழ் நிலைத்து! / 92
சாந்திப் பேரொளியே! / 94

# அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்...

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
ஆடிக் களித்தேன் அன்னை பூமியில்!
கற்றைக் குழலாள் கனிமொழி யருகில்
காதலும் கற்பும் கலந்திடும் நிலையில்!
ஒற்றைப் பனைவளர் முற்றத் தழகில்
ஒசிந்திடும் முல்லைக் கொடிப்பூ மணத்தில்!
எற்றைக்கு மழியா இன்பத் துய்ப்பில்
எல்லாச் சுகமும் இணைந்ததென் னிடத்தில்!



உழைப்பு முயர்வும் ஓங்கிய வுணர்வும்
உள்ளந் தெளிதரு கல்விப் புணர்வும்
அழைப்பில் விருந்தும் ஆனந்த மருந்தும்
அவரவர்க் கேற்றநல் லறமெனப் பொருந்தும்
தழைக்கின் றதுவோர் தருமம் இதுவெனத்
தமிழர் வாழ்வினுக் கணிகலன் சாலும்
மலைக்குன் றெழுந்திடும் மாமதி நீழலில்
மண்ணின் மதியுடன் மயங்கிக் கிடந்தேன்.

ஏர்பிடித் துழுதலால் ஏற்றம் காண்பவர்
ஏற்றம் இறைத்தலால் இன்பயிர் வளர்ப்பவர்

நீர்பிடித் துழுதலால் மீன்வளம் பெறுபவர்
நித்தமும் ஓய்விலா துழைப்பினா லுயர்பவர்
போர்பிடித் துழுதலால் புறநூல் படைப்பவர்
புன்னகை புரிந்துதம் இன்னுயிர் ஈபவர்
யார்பிடித் திடினும் யாவர்க்குஞ் சமமென
யாங்கணு மொளிதரும் திங்களைக் கண்டேன்.

பூவளர் சோலையில் பொங்கிடும் வண்டொலி
புதுமண மக்களில் தங்கிடும் சிரிப்பொலி
நாவளர் வார்த்தைகள் நல்கிடும் நயவொலி
நம்மிறை வன்உறை ஆலய மணியொலி
காவளர் தருக்களில் கரந்துறை புள்ளொளி
காலநன் கொடையெனக் கனித்தமிழ் மொழியொலி
ஆவலைத் தூண்டிடும் அத்தனை ஒலிதரும்
ஆனந்த இரவினில் நிலவினில் ஆடினேன்.



மானிடர் உயர்வுறும் மார்க்கம் பலவுடன்
மண்மிசை மாசறச் சுதந்திரம் மாண்புறும்
கூனுடல் இன்றியே கொள்கை ஒன்றியே
குவலயம் பயனுறத் தொண்டுகள் சீர்படும்
வானுயர் தமிழ்மொழி வளர்மொழி யாகிட
வையகம் வணங்கியே வரிசைகள் வழங்கிடும்
தானுயர் வதுவுடன் தாய்நிலம் வாழ்ந்திடத்
தயைபுரி வள்ளலாய்த் தண்மதி பொழிந்ததே!

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
அல்லியும் ஆம்பலும் அலர்ந்தன மகிழ்வில்!
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
இதழ்கள் இழந்தவை இறந்தன மண்ணில்!
பற்றைக் காடுகள் பரவிய மனைகள்
பாழடைந் திடக்கொடும் பாம்புகள் தங்கின
சற்றைக் கும்மனச் சாந்தியைத் துறந்து
சஞ்சல வாழ்வின் சரித்திரம் தொடரும்.



வலைக்ககப் பட்டபுள் வாடுதல் போலும்
வானுறு இடிதலை வீழுதல் போலும்
உரற்ககப் பட்டது உலக்கைக்குத் தப்பிட
உதவுவோ ரின்றியே ஒழிந்திடல் போலும்
நிலைக்கள னிழந்துதம் நிம்மதி யழிந்துமே
நீதியும் நேர்மையும் நெருங்கிடப் பெறாமலே
கொலைக்கள மேகிடும் கொள்பலி யாடெனக்
குமுறிடும் நெஞ்சமோ டஞ்சுவார் தமிழர்கள்.

இனமத மொழிகளின் சமத்துவம் குன்றிட
இலங்கையில் அமைதியே இல்லையென் றாகிட
குணமுறை பிழைத்தவர் கொள்கைகள் வென்றிட
கோயிலும் குடும்பமும் கொலைக்கள மாகிட
முனைபல விருந்துநம் வாழ்வை யழித்திட
முட்களும் கற்களும் மூர்க்கமாய்த் தாக்கிட
தினம்பல செய்திகள் திடுக்கிட வைத்திடத்
திரும்பவும் மனிதர்முன் தெய்வம் தோற்றதே!

ஊர்களை உயிர்களை உடைமையை யிழந்து
உள்நாட் டினிலே இடம்பல பெயர்ந்து
வேர்களைத் தாங்கும் விழுமியந் துறந்து
வேற்றுள நாடுகள் அகதியா யலைந்து
ஆர்தரு வாரோ அடைக்கல மென்று

அல்லற் பட்டு ஆற்றுவா ரின்றிப்
பேர்பெற்ற தமிழர் பேயாய் நாயாய்
பிறந்தது எதற்கோ? பேசுவாய் நிலவே!

அன்றைய நிலவினில் அமைந்தநல் வாழ்வினை
அடைந்தே தீருவோம் அதுவரை பொறுத்திடு!
இன்றைய இழிதுயர் இல்லையென் றாகிடும்
இன்பமாய்த் தமிழிலே இன்னிசை பாடிடு!
குன்றிய தனைத்துமே கோபுர மாயெழும்
குளிர்நிலா உனதெழிற் கோலத்தைக் காட்டிடு!
வென்றிகொள் வீரமுங் காதலும் விளைந்திடும்
வெண்ணிலா தண்ணொளி விளங்கிடச் செய்திடு!

(கொழும்புத் தமிழ்ச்சங்கம் மார்ச் 2007 இல் அகில இலங்கை ரீதியில் நடத்திய மரபுக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை)



**- "கலைமுகம்" யூலை - டிசம்பர் 2007**

# எங்கள் தமிழ் வாழ்கவே!






தாயாகி வந்த எங்கள் தமிழ் வாழ்கவே! - இந்தத்
தாரணியில் நிலைத்து என்றும் புகழ் சூழ்கவே!
(தாயாகி)

தீயாகிப் பகைதுரத்தும் திறம் ஓங்கவே! - நெஞ்சம்
தெண்ணிலவுத் தென்றலதாய்ச் சுகந் தாங்கவே!
(தாயாகி)

மூவேந்தர் மடிசுமந்த முத்தமிழ் வாழ்க! - மலை
முருகனுடன் சிவன்வளர்த்த மாத்தமிழ் வாழ்க!
பாவேந்தர் மனம்நிறைந்த பைந்தமிழ் வாழ்க! - தெய்வப்
பாமாலை பக்திகமழ் செந்தமிழ் வாழ்க!
(தாயாகி)

அகம்புறத்தோ டறநூல்கள் ஆக்கி வைத்தவள்! - சுவை
ஐந்துபெருங் காப்பியங்கள் தேக்கி வைத்தவள்!
இகமீதில் இலக்கணங்கள் இனிய தந்தவள்! - என்றும்
இயலிசை நாடகமும் இணைய நின்றவள்!
(தாயாகி)

பலமதத்தார் ஒன்றுசேர்ந்து பரவிய மொழியாள்! - அவர்
பண்ணிவைத்த இலக்கியச்சீர் பெருகிய தமிழாள்!
உலகின் செம்மை மொழிகளுள்ளே உயர்வுகண்டவள் - அந்த
உணர்ச்சியென்றும் மாய்ந்திடாத ஊக்கம் கொண்டவள்!

(தாயாகி)

படிப்போர்க்குப் பாலைப்போன்று இனிக்கும் தன்மையாள் - தன்னைப்
பகைப்போர்க்கு வேலைப்போன்று அழிக்கும் வன்மையாள்
முடியோடும் கொடியோடும் வீரமுரசுகளோடும் - முன்பு
முச்சங்கம் வைத்துஆண்ட முத்தமிழ்ச் செல்வி!

(தாயாகி)

கபில பரண நக்கீரர் காதலின் தலைவி! - உயர்
கம்பன் இளங்கோ பாரதியின் காப்பியச் செல்வி!
அகிலம் போற்றும் வள்ளுவரின் அருமறை அரசி! - புகழ்
அருண கிரி வள்ளலாரின் ஆன்மீகம் அலசி!

(தாயாகி)

புதிய பழைய கலைகளெலாம் தமிழிலே வளர்க! - நல்ல
புதுமை ஆக்க வகைகளெலாம் தமிழிலே மலர்க!
பதிய மிட்டுப் பாதுகாக்கும் பரம்பரை நமதே! - தமிழ்ப்
பண் பாட்டில் வீரம்மானப் பாதையும் எமதே!

(தாயாகி)

- 2000

## சிந்தனை செய்யடா!





*சிந்தனைசெய்யடா! செந்தமிழ் மைந்தனே!*
*சிறுமையை நீக்கியே பெருமையாய் வாழவே!*
*(சிந்தனை)*

*வந்தனை செய்வதற் கோர்வரம் பில்லையா? - பிறர்*
*வால்பிடித்து வாழ்வதன்றி வழிவே றில்லையா?*
*(சிந்தனை)*

*பாராண்ட இராவணேசன் பரம்பரை யானவனே!*
*ஊராளும் கலையனைத்தும் உடன்பிறப் பானவனே!*
*வீராதி வீரன்பண் டாரவன்னியன் சங்கிலியன்*
*விண்ணாளும் மாவீரர் வெற்றிகளுக் குரியவனே!*
*(சிந்தனை)*

*பண்பாட்டை இழந்தஇனம் விடுதலையைக் காணுமா?*
*பகல்வேஷம் போடுவதால் பலன்வந்து சேருமா?*
*உன்பாட்டில் நீநடந்தால் உயர்ந்திடுதல் முடியுமா?*
*உத்தமர்கள் வளர்த்ததமிழ் உலகினிலே மடியுமா?*
*(சிந்தனை)*

கலைமுதலாய்த் தொழில்வகையில் கடமைகளைச் செய்யடா!
காணுமுலகப் புதுமையெலாம் கவின்தமிழில் வையடா!
நிலைமாறும் சுயநலமே நெருங்கிடாமல் பாரடா!
நீணிலத்தில் தமிழனென்று நெஞ்சுநிமிர்த்திக் கொள்ளடா!
(சிந்தனை)

சிறுபறவை குருவிகட்டும் சின்னவீடு தெரியுமா?
செந்தமிழன் நெஞ்சத்திலே சிந்தனைகள் விரியுமா?
ஒருதடவை ஆண்ட இனம் மறுதடவை ஆளுமா?
உலகினிலே தமிழராட்சி உழைப்பினாலே மலருமா?
(சிந்தனை)

**2000**

# ஓ! யாழ்ப்பாண தேசமே!

ஓ! யாழ்ப்பாண தேசமே
உன் அழகிய வதனம்
செம்புள்ளி கரும்புள்ளி குத்தப்பட்டு
விகாரமாய் மாறியது ஏன்?
உயிர்த்துடிப்பு அடங்கிய பிணம்போல
உணர்ச்சிகளை நீ
ஒழித்துக் கொண்டது எதற்காக?
தென்னஞ் சோலைகளும் பனைமரக் காடுகளும்
மாந்தோப்புகளும் இழந்த நிலையிலா இங்கே
சனநாயகக் குயில்கள் கூவவில்லை?
இளங்காலைப் பொழுதும் இளவேனிற் காற்றும்
மணம்வீசும் மல்லிகையும் மயக்கும் தோடிராகமும்
இனிமை தரவில்லை என்பதனாலா
தவழ்ந்து வரும் குழந்தையைக்கூட அள்ளி முத்தமிட
மனம் மறுத்து மரத்துப்போய்க் கிடக்கிறது
முட்கம்பி வேலிக்குள்ளும் அடுக்கிய மணல் மூடைக்குள்ளும்
முடங்கிக் கிடந்து கிடந்து முதுகு கூனாகிப் போனதனாலா
மானுடத்தின் விழிகளும் குரல்வளைகளும்
மனச்சாட்சியைத் திறக்க மறுக்கின்றன
மளிகைச் சாமான்களுக்கும் மனிதத் தலைகளுக்கும்
நடக்கும் காணாமற்போதல் போட்டியில் பாவம்
அஃறிணைப் பொருட்கள் தோல்வி காணுகின்றன
ஈரம் கசிந்த இதயங்களை இழந்ததனாலா மனிதர்கள்
தொண்டைக்குழி தொடங்கித் தொடர்ச்சியாக
வயிற்றைப் படைத்தவராக வாழத் தொடங்கிவிட்டனர்
இனவாத மதவாதக் குழந்தைகளைப் பிரசவிக்கவென்றே
கர்ப்பம் தரிக்கின்ற பத்திரிகைத் தாய்மார்

நாட்டில் பலரிருப்பதனாலா இங்கே
ஊனமுற்ற குழந்தைகள் கூடத்
துண்டுப் பிரசுரமாய்த் தொலைந்து போகின்றன
வண்டுகள் போலக் காமாளை வயிற்றுடன்
வாழும் குழந்தைகளின் வறுமைப்பசி நீங்கிடக்
குண்டுகள் போடும் குதூகலத் தாலாட்டும்
அவர்களை உறங்கவைக்க முடியவில்லை
நேர்த்திகளைக்கூட நிறைவேற்ற முடியாமல்
கடவுளர்கள் கூடக் கற்பூரத்துக்குக் கியூவில்
கால்கடுக்க நிற்கின்றனர்
தம்மபத சிகதீபக் கருத்துவெள்ளம் பொங்குவதால்
சிங்களப் பொங்கலில் செந்தமிழ்ப் பயறு
சேர்ந்துவேகும் தேசியம் தொலைந்துவிட்டது
ஓ! யாழ்ப்பாண தேசமே! ஓ! யாழ்ப்பாண தேசமே!



- **"வலம்புரி" 08.06.2007**

(சமகாலத்தில் இதன் சிங்கள மொழிபெயர்ப்புக் கவிதை "ராவய" பத்திரிகையில் வெளிவந்தது)



## ஜீவ ஒளியின் வருகைக்காக...





பரமண்டலங்களில் இருக்கின்ற எங்கள் பிதாவே!
பூமியில் உன்மகனின் வருகைக்காக
ஏங்கிய நெஞ்சங்களோடும், நீர்முட்டிய விழிகளோடும்
நாம் காத்திருக்கிறோம்
மனித மந்தைகளாய், பாவத் தொழுவங்களில்
அடைபட்டிருக்கும்
எங்களது எதிர்காலமும் மகிழ்ச்சியும்
கர்த்தருக்குள் நித்திரையாகி விட்டனபோல் தெரிகிறது
எங்களை நோக்கி வீசுகின்ற காற்றுக்கும்
வேலி போடப்பட்டுள்ளது
எங்கள் காதுகள் கேட்கின்ற சங்கீதமெல்லாம்
முகாரியாய் முடிகிறது
பாதை தெரியாத எங்களது பயணங்கள்
கல்வாரியைச் சென்றடைவதுதான் அதிசயம்
எந்நேரமும் தீமிதிக்கும் தாய்மாரும்

கனவுகளை வாழ்க்கையாய்க் கொண்ட பிள்ளைகளும்
கண்ணாமூச்சி விளையாடுகிறார்கள்
ஏரோதுக்களும் யூதாஸ்களும் எக்கச்சக்கமாய்ப்
பெருகிவிட்டனர்
சத்தியப் பூக்கள் கருகி மடிகின்றன
சிலுவைப்பாடுகளே வாழ்க்கையாகிப் போனதனால்
இரத்தக்குளியல் இதமாயிருக்கிறது
தாய்ப்பாலும் விற்கப்படும் அளவுக்கு மனிதம்
தொலைந்துவிட்டது; ஆனாலும் நாம்
மனக்கணிதத்தில் தேர்ச்சி பெற்றுவிட்டோம்
பயன்தரு பயிர்களை இப்போதெல்லாம்
நாம் விரும்புவதில்லை
குரோட்டன்கள் வளர்ப்பதிலேயே
மனம் மகிழ்ச்சி காணுகிறது
பாலன் யேசுவின் வரவுக்காக மகிழ்ந்து
பாடவும் எம்மால் முடியவில்லை
நாங்கள் குரல்வளை பிடுங்கப்பட்ட
கோழிகள்
தகனபலிக்காகக் காத்திருக்கும்
செம்மறியாடுகள்
சாத்தானின் வேதத்தைக் கேட்டிருக்கும்
சுகவாசிகள்
ஆனாலும்
வானத்தில் உன்னதத்தையும் பூமியில் சமாதானத்தையும்
கிட்டச் செய்வதற்கு
மீட்பரின் வரவுக்காக மீண்டும்
காத்திருக்கிறோம்
வழிகாட்டிச் செல்வதற்கு
வான் நட்சத்திரங்களும் கருகிவிட்டன

எருக்கம்பூவில் முல்லை மணத்தை
நுகர்ந்து பார்க்கும் சாஸ்திரிகள்
இன்னும் இருக்கிறார்கள்
மந்தைகளுக்குப் பதிலாக நாமிருக்கிறோம்
மாட்டுத் தொழுவங்களாகப் பல இல்லங்கள்
இருக்கின்றன
வைக்கோல் இல்லாவிடினும்
புத்தகக் கற்றைகள் தாராளமாய் உள்ளன
கேட்பதற்கு மண்டையோடுகளின் சங்கீதமும்
பார்ப்பதற்கு எலும்புக்கூடுகளின் நடனமும்
மகிழ்வூட்டும் சங்கதிகள்
ஆனாலும்
மெழுகுவர்த்திகளின் வெளிச்சம் மட்டும் அணைந்து
எங்கும் இருள் மண்டிக் கிடக்கிறது
எழுதப்பட்ட தீர்ப்புகளின் பின்னர் விசாரணைகளுக்காக
நாம் தயாராக இருக்கின்றோம்; வித்தியாசமான ஊமைகள்
நாம்
"பிள்ளைபெறா மலடிகள் பாக்கியவதிகள்" என்ற
உண்மை இன்றுதான் அர்த்தம் பெறுகிறது
எங்களுக்குப் பனி சுடுகிறது;
வெய்யில் குளிர்கிறது
இருந்தும்
மீட்பரின் வருகைக்காக
நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்
நாசரேத்தின் தலைவர் வருகையை
ஏரோதின் விசுவாசிகள் மீண்டும் மறுதலிப்பர்
ஆனாலும் பிதாவே!
உமது புத்திரனைப் பூமிக்கு அனுப்பி வையுங்கள்
புதிய பெத்தலகேமில் யேசுபாலன் பிறக்கட்டும்

யேசு என்ற ஜீவஒளியின் வருகைக்காக
மீண்டும் நாம் - மீண்டும் நாம்
காத்திருக்கிறோம்; காத்திருக்கிறோம்
இராச்சியமும் வல்லமையும் மகிமையும்
உன்னுடையவைகளே
ஆமென்...

**- "வலம்புரி" 08.06.2007**

(சமகாலத்தில் இதன் சிங்கள மொழிபெயர்ப்புக் கவிதை "ராவய" பத்திரிகையில் வெளிவந்தது)

# மண்ணில் பிறந்திட வாரும்



மீண்டும் ஒருமுறை மண்ணில் பிறந்திட
தேவமகனே வாரும்!
மேவும் உதிரப் புனலி லாடும்
மனிதகுலத் தினைப் பாரும்!
கூண்டுக் கிளிகள் குமுறும் நெஞ்சின்
ராககீதங்கள் கேளும்!
குள்ளநரிகள் துள்ளும் குதூகலக்
கொடுமை நீளுதே நாளும்!

மேய்ப்பனில்லா ஆட்டு மந்தைகள்
வேறு வேறாய்ப் போகும்!
மேலும் மேலும் வேட்டை யாடுவோர்
விருந்தின் பலிகள் ஆகும்!
சாய்த் தவற்றின் தாகந்தீர்க்கும்
சாந்தி ஒளியும் நீரே!
சாவை வென்று வாழ்வைக் காட்டும்
சந்நிதி யுன் தாளே!

பூத்த கமலப் புன்சிரிப்பைக்
காட்டிக் கைகள் அசைக்கும்!
புனிதமேரி அன்னை மடியில்
பொலிந்து கிடந்து தவளும்!
காத்தருளும் கடமையாலே
கர்த்தருக்குள் நிற்கும்!
காசினியை வாழச் செய்யும்
மேசியாவே யாகும்!

வருத்த முறுவோர் இளைப்பைப் பெறவே
வாரும் என்று அழைக்கும்!
வாஞ்சையோடு வார்த்தை தந்து
வாதை நீக்கி யுதவும்!
உருத்த சினத்தைக் கடிந்து மண்ணில்
உண்மை நன்மை விளக்கும்
உலக முய்யத் தன்னைக் கொடுத்து
உயிர்ப்பின் மகிமை உயர்த்தும்!

அன்பு மடங்கி அறனு மொடுங்கி
ஆசை நஞ்சை யுண்ணும்!
என்பு முருகும் வண்ணம் செய்யும்
ஈனம் எல்லை மீறும்!
முன்பு செய்த பழியின் பாவ
மூட்டை தன்னைச் சுமக்கும்
வன்புடைய வையந் தன்னை
வாழச் செய்யும் யேசு பிரானே!

- **"உதயன்" 25.12.2007**

# நீ என்னைப் பாடச் சொல்லுகிறாய்!



எங்கள் வீதிகளில் தொங்கவிட்ட தோரணத்தின்
பசுமை இன்னும் தொடர்கிறது!
எங்கள் அன்னையரின் எழிலார்ந்த நெற்றிகளில்
குருதியில் குழைத்தமண் குங்குமம் இடுகிறது!
எங்கள் இளையவர்கள் எண்ணிக்கை மாத்திரம்
எல்லா விதங்களிலும் இறங்கியே செல்கிறது!
விடியலின் பூபாளம் முகாரியாய் ஒலிக்கிறது! ஆனாலும்
நீ என்னைச் சனநாயகம் பற்றிப் பாடச் சொல்லுகிறாய்!
குரல்வளை அறுக்கப்பட்ட சேவலைக் கூவச் சொல்லுகிறாய்!
காலொடிந்த மயிலைக் களிநடம் ஆடச் சொல்லுகிறாய்!

சங்கக் கடைகளிலே மனிதம் சரிந்து கிடக்கிறது!
சகலதையும் இழந்து புதுச் சரித்திரம் படைக்கிறது!
அங்கிங் கெனாதபடி எங்கும் அழுகுரல்கள்!
அதற்கேற்ப ஆனந்தத் தாண்டவமும் நடக்கிறது!
கொலையே கலையாகும் கொள்கைப் பரம்பலிலே
கொள்ளையும் வன்முறையும் கூட்டுறவாய் வளர்கிறது!
நேரசூசிப்படி நிகழ்ச்சி நிரல் அமைகிறது! ஆனாலும்

நீ என்னைச் சனநாயகம் பற்றிப் பாடச் சொல்லுகிறாய்!
நரம்பறுந்த வீணையிலே சுரங்கூட்டச் சொல்லுகிறாய்!
நாவிழுந்த பேதையிடம் நாதம் பற்றிப் பேசுகிறாய்!

கறுத்தப் பூனையை இருட்டுக்குள் தேடுகின்ற
காரியம் இன்னும் முடியவேயில்லை!
கௌதம புத்தரின் புனிதமும் காருண்யமும்
கதைகளில் கூடக் காணக் கிடைக்கவில்லை!
சத்தியம் சாந்தி சமாதானம் சமத்துவத்தைக்
கல்லறைகளைத் தோண்டியும் கண்டு பிடிக்கவேயில்லை!
கலப்படம் என்பது தாய்ப்பாலுக்கும் தாராளமாகி விட்டது!
காலநதியில் மரணக் கரையும் கண்ணுக்குத் தெரிகிறது!
உயிர் மூச்சினையும் அந்நிய வெம்மை உறையவைக்கிறது
ஆனாலும்
நீ என்னைச் சனநாயகம் பற்றிப் பாடச் சொல்லுகிறாய்!
உணர்வுகள் அடங்கிய ஊமையைப் பாடச் சொல்லுகிறாய்!
உண்மையாய்த்தானோ நீ என்னைப் பாடச் சொல்லுகிறாய்?

- 2009

## சாக்காட்டில் பூத்த நறுமுல்லையா?



சாக்காட்டில் பூத்தநறு முல்லையா? - நாடு
சருகாவ தன்றிவழி இல்லையா?
ஏர்க்காட்டில் எருமைகள் இடறுகின்றதே - பயிர்
எவருக்குமே பயன்படாமல் சிதறுகின்றதே!
(சாக்)

பூக்காட்டில் புலால்மணத்தை நுகரலாகுமோ? - போதி
புத்தர்தந்த பொன்மொழியை மீறலாகுமோ?
பேய்க்காட்டிப் பேய்க்காட்டி ஆளலாகுமோ? - தேசம்
பிணந்தின்னும் சுடுகாடாய் மாறலாகுமோ?
(சாக்)

எழில்சூழ்ந்த இலங்கையாந் திருநாட்டிலே - வளம்
எல்லா விதங்களிலும் அழியலாகுமோ?
தொழிலாலும் அறிவாலும் தோன்றுமின்பமே - இன்று
தொட்டாலும் கிட்டாத துன்பமாகுமோ?
(சாக்)

செந்தமிழும் சிங்களமும் சேர்ந்திலங்கவே - நெஞ்சம்
சிநேகிதமாய்ச் சிரித்ததொரு பொற்காலம்!
சந்ததமும் சகோதரராய்ச் சமத்துவமாய் - இங்கு
சனநாயகம் தழைத்திருந்த நற்காலம்!
(சாக்)

எந்தவிதக் கண்ணூறு எமக்குற்றதோ? - ஆண்ட
இங்கிலீசுக் காரர்செய்த வினைமூண்டதோ?
உந்துகின்ற இனவாதத் தீ எரியுதே! - அதில்
உறவுகளும் நிலவுகளும் ஒழிந்து போகுதே!

(சாக்)

பண்பாட்டை மறந்துநின்ற விலங்குகளானோம்! - தாய்ப்
பாசத்தையும் நேசத்தையும் பழித்தவரானோம்!
புண்பட்ட மனத்தினராய்ப் புல்லர்களானோம்! - ஒரு
புரட்சிகர வாழ்வுநோக்காப் பேதையரானோம்!

(சாக்)

ஒருதாயின் வயிற்றுதித்த மக்களென்பதா? - இனங்கள்
ஒன்றுபல உறவுகொண்டு வாழுமென்பதா?
திருநாடு அனைவருக்கும் தாய்நாடென்பதா? - இதைத்
தெரிந்திருந்தும் கொடியமனம் ஏற்கமறுப்பதா?

(சாக்)



சாந்திஅன்பு கருணையிங்கு தழைத்திட வேண்டும் - என்றும்
சமாதானத் தென்றல்வந்து தழுவிட வேண்டும்
மாந்திநின்ற வன்முறைகள் மடிந்திட வேண்டும் - நாடு
மக்களாட்சித் தத்துவத்தை உணர்ந்திட வேண்டும்

(சாக்)

இனவாதம் மதவாதம் இல்லா தொழிப்போம்! - தெய்வம்
இருக்குதென்ற நிலைதன்னை இதயத்தில் வைப்போம்!
மனமேவும் குணத்தைநாடி மகிழ்வுடன் வாழ்வோம்! - புவி
மானுடத்தின் வெற்றியென மண்ணுல காள்வோம்

(சாக்)

அலைவந்து தாலாட்டும் இலங்கைத் தீவிலே! - மீண்டும்
அனைவருமே அன்புறவால் ஆனந்தங் காண்போம்!
நிலைமாறிப் போகுமிந்த நிலையற்ற வாழ்வில் - என்றும்
நிலைத்திருக்கும் ஒற்றுமையை நெஞ்சத்தில் வளர்ப்போம்!

(சாக்)

2009

# இன்னும் இரங்கவில்லையா இறைவா?





இன்னும் இரங்கவில்லையா இறைவா? - இந்த
மண்ணில் பிறந்த காரணத்தால்
மடியும் மக்கள் நிலைகண்டும்

(இன்னும்)

கண்ணும் வாயும் நெஞ்சும் அழிந்து
கல்லைப் போலக் கிடக்கிறார்! - சிலர்
பண்ணும் வேள்வித் தீயில் வெந்து
பலியின் ஆடாய் மாய்கிறார்!

சொந்த மிழந்து சுகமுந் துறந்து
சூனிய மாய்ப் போகிறார்! - இடையில்
வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி
வேஷம் இட்டோர் நுழைகிறார்!

மந்தைக் கூட்டம் போலக் கருதி
மகிமை கொண்டோர் மேய்க்கிறார்! - அவர்
சந்தைப் பொருளாய் நினைத்துத் தானே
சரித்திரங்கள் படைக்கிறார்!

புனிதமான புத்தன் மண்ணில்
பொங்கும் இரத்த வெள்ளமே! - அதில்
மனித மழிய மாண்பு மொழிய
மகிழும் பேதை உள்ளமே!

மயான மீதில் மலர்ந்த மலர்கள்
மண்ணில் சருகாய் மடிவதா? - அவை
தியானத் திருக்கும் தேவ னடிக்குத்
திரும்பிச் செல்லல் கொடியதா?
அங்க மிழந்து ஆவி துறந்து
அடிமை இனமாய் ஆவதா? - துயர்ப்
பங்க முழன்று பலரும் நகைக்கப்
பாவக் கிடங்கில் வீழ்வதா?

மனிதர் உயிரை மனிதர் பறித்து
மமதை கொள்ளும் காலமோ? - கலி
துணிவு கொண்டு ஆடுங் கூத்தில்
துன்ப மேகக் கோலமோ?

இறப்பும் பிறப்பும் எவர்க்கு முண்டு
இடையில் வாழ்வு கொஞ்சமே! - இதை
மறப்பின் உலகில் மனித வாழ்க்கை
மாய மான மஞ்சமே!

சிலுவைப் பாடு பலவும் பட்டுச்
சிந்தை உடைந்து தேம்புறார்! - அவர்
வலுவைக் குறைத்து வாழ்வை யழிக்க
வகைகள் பலவும் செய்கிறார்!

இன்று எனக்கு நாளை யுனக்கு
இயற்கை நியதி இதுதானே! - இதை
நன்கு உணர்ந்து நடக்கார் தம்மை
மனிதர் என்பது பொய்தானே! 2009

# சுனாமிப் போர்



அகன்ற வாயினைத் திறந்து கொண்டு
ஆவே சத்துடன் நுழைந்தாய்!
ஆயிர மாயிரம் மானுட வுயிர்களை
அகப்படுத்தியே மகிழ்ந்தாய்!
பிறந்த சிசுவும் முதிர்ந்த கிழமும்
பிணங்க ளாகிடச் செய்தாய்!
பெரியவர் சிறியவர் உள்ளவர் இலாதோர்
பேதமிலா துயிர் கவர்ந்தாய்!

மலர்ந்த பூக்கள் மணந்தரு முன்னம்
மண்ணிடை மாய்த்ததுன் வீரம்!
புலர்ந்த பொழுதின் பொன்னெழில் வண்ணம்
புதைகுழி போனதுன் கோரம்!
கலந்த மணத்தினர் காதலும் காமமும்
கரைந்திட முன்னர் விரைந்தாய்!
காலனுன் பிடியில் கனிந்தநல் வாழ்வும்
கணத்தினில் அழிந்திடக் கண்டாய்!

வீசிய தென்றல் புயலாய் மாறிட
வீணையின் நரம்புகள் ஒடித்தாய்!
மாசிலா துலகின் மாண்புகள் அறுந்திட
மாபெரும் துயரினை ஈந்தாய்!
தேசுலா நிலவினில் தேசம் ஒளிர்ந்திடும்
தெரிசனம் பிடிக்காது சினந்தாய்!
கூசிடும் மனத்தினால் குரூர குணத்தினால்
குடிகளைக் கொன்றுநீ புசித்தாய்!

நிலத்தினைப் பறித்தாய்! நீர்நிலை உண்டாய்!
நிலவிய வளமெலாம் நிர்மூலஞ் செய்தாய்!
பிலத்தினைப் போல்வாய் பிதுங்கிட நின்று
பிணந்தின்னி எனப்பெயர் கொண்டாய்!
குலத்தினைக் கெடுக்கும் கோடரிக் காம்புகள்
குறிசுட்ட பறவைகள் மட்டும்
பலத்தினைக் கண்டுன் பாதம் பணிந்து
பசியினைப் போக்கின நன்றாய்!



சிலமணி நேரம் சீறிய மூர்க்கம்
சிதைத்தது பலயுகம் வாழ்வை!
சிந்தனை பிறழ்ந்த செயலதன் விளைவு
சேர்ந்தது பாவத்தின் நரகை!
குலமுறை குலைந்து கொள்கைகள் இழந்து
கோர வடுக்களைப் பதித்தாய்!
தலைமுறை தலைமுறை யாய்ப்பழி ஏற்றாய்!
தர்மத்தின் சாபமும் பெற்றாய்!

பிறப்பின் பெருமை இறப்பின் மகிமை
பித்தர்கள் உணருவ தில்லை!

அறத்தின் அருமை அன்பின் வலிமை
அறிவிலார் அடைவது மில்லை!
கறக்கும் பசுவின் பாலைப் பருகியோர்
கறவையைக் கொன்றிடும் கதைபோல்
உறக்கும் துணையதோர் உணர்விலா மதியீனர்
உலகினை அழித்திட முயல்வார்!

பேரொலி யெழுப்பிப் பேயென ஆடும்
பித்து உனக்கேன் பிடித்தது?
வேரொடு மக்கள் வாழ்வைப் பிடுங்கும்
வெட்கம் உனக்கேன் மறந்தது?
யாரொடு நொந்தும் யார்க்கெடுத் துரைத்தும்
யாதும் பயனில வென்பதால்
சீரொடு நிமிர்ந்த சிறந்தநல் மண்ணினைச்
சின்னா பின்னஞ் செய்வதோ?



சுனாமிப் போரும் போராஞ் சுனாமியும்
சுதந்திர தாகம் கொள்ளலும்
அனாதைகள் அகதிகள் அவலம் பெருகிட
அமைதியை இழந்தது உலகம்
கனாபல கண்டு காலங் கழிக்கும்
காரியம் முடிந்திடா நிலையில்
வினாபல எழுமே! விரும்பும் சமாதானம்
விளைவது எப்படிக் கூறு?

**-"கலைமுகம்" யூலை- செப்டெம்பர் 2014**

## இதயங்கள் எமக்காக வேண்டும்

எல்லோரும் வாழ அல்லாஹ்வை வேண்டும்
இதயங்கள் எமக்காக வேண்டும்
நல்லோர்கள் நெஞ்சில் நாள்தோறும் வாழும்
நன்மைகள் உருவாக வேண்டும்

வல்லானை வழுத்தி வாயாரப் பாடி
வாழ்க்கையும் தொடர்ந்திட வேண்டும்
அல்லாத நீக்கி அல்லாஹ்வி னருளால்
அமைதியும் உண்டாக வேண்டும்

பொல்லாத உலகின் புன்மைகள் நீங்கப்
பொறுமையாய் உழைத்திட வேண்டும்
கல்லாத பேர்கள் இல்லையென் றாகக்
கல்வியைப் பெற்றிட வேண்டும்



கல்லான மனத்தைக் கனியாக்க உதவும்
காலங்கள் நாம்காண வேண்டும்
இல்லாரை இருப்போர் இதயத்தால் வெல்லும்
இன்முகம் காட்டிட வேண்டும்

சொல்லம்பு நீக்கிச் சுவையாகப் பேசும்
சுந்தரத் தமிழ்வாழ வேண்டும்
வில்லம்புப் புண்போல் வேதனையின்றி
விளையாடும் வீரமும் வேண்டும்

அல்லாஹுத்ஆலா அன்போடு எம்மை
அனுதினம் காத்திட வேண்டும்

நில்லாத தகற்றி நிலையானதேற்று
நிம்மதி நாம்கொள்ள வேண்டும்

பேதங்கள் மறந்து பிணைப்பினா லுயர்ந்து
பெருமைகொள் மனிதராய் வாழ்வோம்
ஏதங்களின்றி இஸ்லாத்தின் வழியில்
இன்பங்கள் யாவையும் பெறுவோம்

மணம்வீசும் மலர்கள் நபிமணி மொழிகள்
மனதினில் இருத்திடச் செய்வோம்
குணம்வீசும் முகங்கள் குமுதமாய் மலரும்
கொள்கையை வரவேற்று நிற்போம்

அன்புகொள் அறிவும் அடக்கமும் பேணி
அகிலத்தில் என்றென்றும் வாழ்வோம்
நன்றுசெய் மனத்தால் நானிலம்வாழ
நபிபிரான் வழிபணி புரிவோம்



- 2010



## உலகம் போற்றும் உயர்வான் நபியே!



பாலை வனத்தில் பூத்த மலரே!
பாரின் துயரம் தீர்த்த நபியே!
சோலைத் தென்றல் போல நெஞ்சில்
சுகமளிக்கும் அமுதக் கடலே!



நீதி யான இறைவன் வார்த்தை
நிலைத்தருளும் அல் - குர் ஆனைச்
சோ:தி யாக விளங்கும் வண்ணம்
சொன்ன புண்யச் சுந்தரமே!

பொய்மை இருளைப் போக்கி யென்றும்
புத்தொளியை மண்ணில் பரப்ப
மெய்ம்மை இறைவன் அனுப்பி வைத்த
மேன்மைக் குறைஷிக் குலவிளக்கே!

ஐந்து வேளைத் தொழுகை செய்வீர்!
ஆண்டவனின் உண்மை மறவீர்!
நைந்த மனிதர்க் குதவி புரிவீர்!
என்றுசொன்ன இஸ்லாத் நபியே!

மிடிமை கொடுமை மிலேச்சத் தனங்கள்
மிஞ்சிக்கிடந்த உலகில் தோன்றி
அடிமை வாழ்வை அகலச் செய்ய
அருளளித்த அண்ணல் நபியே!

வஞ்ச மில்லா இறைவன் கருணை
வாரிக்கொள்ள வழிகள் காட்டி
அஞ்சே லென்று அபய மளித்த
ஆத்மஞான சீல நபியே!

பாதை தவறும் மாந்தர் தம்மைப்
பாசத் தோடு பரிந்தணைத்து
ஓதும் மணியாம் மொழிகள் தந்த
உலகம்போற்றும் உயர்வான் நபியே!



- 2010

# மாதா சாரதா தேவி



மண்மீது மாதர்கள் மகிமையின் சாட்சி!
மாதா சாரதா தேவியவர் மாட்சி!
புண்ணிய பாரதத்தின் புதல்வியாய்த் தோற்றி
புவிவாழ அருள்செய்த புனிதமே போற்றி!

சக்தியின் அவதார சொரூபியாய் விளங்கிச்
சாந்தமும் கருணையும் சார்ந்திடத் துலங்கி
பக்தியின் சிகரமாம் பரமஹம் சரினருள்
பரவிய இல்லறப் பாரதப் பெண்மை!

காமமே யணுகாத காதலின் வடிவம்!
காளியின் அருள்பொலி கடமையின் உருவம்!
பாவமே புரிந்தார்க்கும் பரிந்திடும் தெய்வம்!
பாதபங் கயங்களைப் பணிந்துநாம் உய்வோம்!

சாதிகள் சண்டைகள் சாய்த்திட்ட வாளிது!
சமரச சன்மார்க்க நெறிச்செங் கோலிது!
ஓதியே இன்புறு உயர்வேதத் தூணிது!
ஓங்கார ரூபத்தின் உண்மையே தானிது!

\- 1999

## இலங்கை ஒரு பண்பாட்டுச் சோலை





பலவண்ணப் பூக்களாற் படைத்திட்ட மாலை! - இலங்கை
பல்லினச் சமுதாயப் பண்பாட்டுச் சோலை!
நலமெல்லா மளிக்கின்ற நற்கல்வி யாலே - என்றும்
நாம்காண்போம் நல்லிணக்கம் நானிலத்தின் மேலே!

(பல)

ஒருமரத்தில் குடியிருக்கும் பறவைகளா யுணர்வோம்! - எங்கள்
ஒற்றுமையைச் சீர்குலைக்கும் உபத்திரவம் புரியோம்!
வருமுலகில் தலைநிமிர்ந்து வாழ்ந்திடவே யுழைப்போம்! - கல்வி
வற்றாத நீரூற்றா மென்பதைநாம் மறவோம்!

(பல)

இனமென்றும் குலமென்றும் மதமென்றும் பேதம் - இனி
இலங்கைத் திருநாட்டில் இல்லாது செய்வோம்!
மனமொன்றி மானுடத்தின் மகத்துவம் காணும் - உலகம்
மாறுகின்ற நிலைக்கேற்ற மக்களாக உயர்வோம்!

(பல)

உடலோடு உளம்சேர்ந்து உரம்பெற்று வாழும் - நல்
உன்னதங்கள் நிலைபெறவே உழைப்போ மெந்நாளும்
மடல்தாழை விரிந்தன்பு மணம்வீசல் போலே - மக்கள்
மனமுறும் சமாதான நீரோட்டத் தாலே


(பல)

அறியாமை இருளோட்டும் அகல்விளக்குக் கல்வி - அதை
அடைந்தாலே அகம்வெளுக்கும் ஆவலோடு அள்ளிச்
சரியான நெறிதன்னில் நெஞ்சங்களைச் செலுத்தி - இந்து
சமுத்திரத்தின் நித்திலத்தில் சமாதானம் நிறுத்தி

(பல)

- **2005**

## சிறுவர் உலகம் சிறுவருக்கே!





சிறுவர் உலகம் சிறுவருக்கே!
சிந்தையி லிதைநாம் கொண்டிடுவோம்!
பெரியவராகச் சிறுவரை நடத்தும்
பேதைமை தன்னை நீக்கிடுவோம்!

இயற்கை யோடு இணைந்திடவும்
இன்ப மாகக் கற்றிடவும்
செயற்கை அனுபவம் சேர்த்திடவும்
செய்வோம் சிறுவர்கள் நலமோங்க

உடலும் உள்ளமும் உரம்பெறவே
உண்மை நன்மை உணர்ந்திட வே
படரும் கொடிகள் நிலைபெறவே
பணிகள் பலவும் செய்திடுவோம்!

ஆடிப் பாடி விளையாடி
அன்பாய்ப் பண்பாய் அனைவரிடம்
கூடி ஒன்றாய் வாழ்வதற்கே
குணமுடை யோராய் ஆக்கிடுவோம்!

எண்ணும் எழுத்தும் கற்றுயர்ந்து
எளிமை பெருமை தனையறிந்து
பண்ணும் பாட்டும் பல்கலையும்
பயின்று சிறக்கப் பழக்கிடுவோம்!

சுதந்திர மாகவே சிறகடித்துச்
சுறுசுறுப் பாகவே செயல்புரியும்
இதந்தரும் விதமாய் அவர்வாழ
என்றும் அயரா துழைத்திடுவோம்!

கல்வியை அவர்க்குத் திணிக்காமல்
களிப்புடன் கற்றிட வகைசெய்வோம்!
பல்வித நடத்தைகள் பயன்பெறவே
பரிசுகள் கொடுத்து ஊக்குவிப்போம்!

வண்ணப் பூக்கள் சிறுவர்களே
வாட்டங் கொள்ளாது நீரூற்றிக்
கண்ணை இமைகள் காப்பதுபோல்
காப்பது எங்கள் கடனன்றோ!

அன்பு கணிப்பு அரவணைப்பு
அமைந்த அழகுச் சூழலிலே
நன்கு சுத்தம் தனைப்பேணி
நல்லவர் வல்லவர் ஆக்கிடுவோம்!

பெற்றவர் உற்றவர் மற்றவரும்
பேணிடும் தெய்வங்கள் சிறுவர்களே!
கற்றவர் ஊட்டுங் கலைகளினால்
காலங்கள் தோறும் அவர்வாழ்க!



- 2012 -

# என்றும் வாழ்கவே...






வண்ணத் தமிழ்போலே வளரும் பிறைபோலே
எண்ணம் இனிதாக என்றும் நீர்வாழ்க!
அன்னை அருள்போலே அன்பு மனத்தாலே
கன்னல் சுவையான கல்வி வளம்பெறுக!

பேராண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை
பெருமையுட னுமக்களித்த ஆசிரியர் பயிற்சியினை
ஈராண்டு காலமதாய் இதயத்தால் ஏற்றுவந்தீர்!
இன்பமே உமக்காகும்! இறைபலத்தால் வாழ்ந்திடுக!

ஆடும் மயிலானீர்! பாடும் குயிலானீர்!
ஆளும் கலைத்தமிழின் அச்சாணி போலானீர்!
நீடும் ஆசிரியம் நிலைபே றுமக்காகும்!
நிதமும் வழிகாட்டும்! நெஞ்சில் ஒளிகூட்டும்!

நல்லாறு நனிசிறந்து நாம்வாழச் செய்வதுபோல்
நல்லிசைப் புலவர்களின் நற்கவிதைப் பயனதுபோல்
இல்லார்க்கும் இரங்குகின்ற இதயமுள்ள மனிதரைப்போல்
இகமதிலே ஆசிரியம் ஏற்றமுற உழைத்திடுக!

வண்ண மலர்க்கூட்டம் வடித்தநறு மாலையெனப்
பண்ணோடு பாடலெனப் பாசத்தாற் கலந்தீர்கள்!
மன்னும் நிலவுலகில் மாறிமாறி நின்றாலும்
எண்ணம் ஒன்றாக எல்லோரும் வாழியவே!

- **2010**

# நல்லாசிரியரைப் போற்றுவோம்!



ஏணி என்போம்! தோணி என்போம்!
எழுத்தறி வித்தவன் இறைவன் என்போம்!
நாணிடும் செய்கை நாடா நலத்தினன்
நல்வழி காட்டிடும் நற்குரு வென்போம்!

ஊது பத்தியும் மெழுகு வர்த்தியும்
உத்தம ஆசிரியர்க் குதாரணம் சொல்வோம்!
கோது தவிர்த்துக் குணத்தா லுயர்ந்து
குவலயம் காணுயர் கோபுரம் என்போம்!

ஊறு கின்ற ஊருணி போலே
உண்மை யறிவினை உதவுவ தாலே
நாறு கின்ற சந்தனம் கற்பூரம்
நல்லா சிரியரின் தியாகத்திற் கிணையே!

அறிவொளி பரப்பி அகவிருள் நீக்கும்
ஆசிரியம் என்றும் அவனியில் வாழ்க!
பிறிதொரு பிறவி பின்னிடும் வரைக்கும்
பெட்புறும் ஆசிரியப் பெருமையே சூழ்க!

- 2010

## பெண்ணின் அடிமை விலங்கறுப்போம்!



ஆணும் பெண்ணும் இணையெனக் கொண்டால்,
அதுவே அறிவுடைமை! - என்றும்
அதுவே நம் கடமை! - அதில்
ஆணாதிக்கம் செலுத்த நினைத்தால்
அகிலத்தில் பெருங்கொடுமை! - அதுவே
அகிலத்தில் பெருங்கொடுமை!



விழிகள் இரண்டில் பெரிது சிறிதென
விளம்புதல் முறையாமோ? - ஆண்கள்
விளம்புதல் முறையாமோ? - பெண்ணை
வீட்டுக்குள்ளே அடக்கி யொடுக்குதல்
விபரீதச் செயலாமே! - என்றும்
விபரீதச் செயலாமே!

எத்தனை தீமைகள் ஆண்கள் செய்தாலும்
எதிர்ப்பது ஆகாதாம்! - பெண்கள்
பொறுப்பது போதாதாம்!
சொத்துடன் வந்தவள் சுகம்பல இழந்தாலும்
சுதந்திரம் கூடாதாம்! - கணவன்
சொன்ன சொல் மீறாளாம்!

அறிவுடன் அன்பும் அழகும் இளமையும்
அமைந்திட்ட பெண்களையே! - ஆற்றல்
விளங்கிடும் பெண்களையே!
குரங்குபோல் மாப்பிள்ளை கொண்டுவா இலட்சமெனக்
கூறுதல் விந்தையன்றோ! - இவர்
குணங்களும் விந்தையன்றோ!
பால்ய விவாகக் கொடுமைகள் யாவும்
பாரினில் மோசமன்றோ! - செய்கை
பகல்முன் வேஷமன்றோ!
வாழ்வினில் பெண்ணை துணையென அணைத்தே
வாழுதல் முறைமையன்றோ! - இதுதான்
வள்ளுவன் அறமு மன்றோ!

பெண்சிசுக் கொலைசெய் பேதைமை யாளரின்
பேய்ச்செயல் அழித்திடுவோம்! - அவர்தம்
பித்தத்தை ஒழித்திடுவோம்!
ஆணினம் புரியும் அடக்கு முறைகளின்
அவலம் நீக்கிடுவோம்! - பெண்கள்
அவனியில் இணைந்திடுவோம்!

மெல்லென வருடும் தென்றலின் சுகத்தை
மேதினி பெறச் செய்வோம்! - இந்த
மெய்ம்மையை உறச் செய்வோம்!
அல்லல்கள் செய்யின் புயலெனச் சீறி
ஆர்ப்பரித் தெழுந்திடுவோம்! - பெண்ணின்
அடிமை விலங்கறுப்போம்!

தாயென வாழ்வோம்! தாரமு மாவோம்!
தரணியில் மானத்துடன்! - நெஞ்சில்
தளர்விலா வீரத்துடன்!
போயகல் அடிமைத் தளைகளைத் தகர்த்துப்
புரட்சியில் பூத்திடுவோம்! - பெண்கள்
புதுமையைப் போற்றிடுவோம்!

- 2001

## தமிழ்க்கவி பாரதி





பாரத நாட்டின தடிமையை நீக்கிடப்
பகையெதிர்த் தெழுந்தவன் பாரதி!
பாஞ்சாலி சபதமும் பாப்பாப் பாடலும்
படைத்தவன் மகாகவி பாரதி!
பாரினில் தமிழர்கள் பைந்தமிழ் மொழியினால்
பயன்பெறச் சொன்னவன் பாரதி!
பாசத்தோ டுயிர்களை நேசிக்கத் தூண்டிய
பாட்டுக் கொருபுலவன் பாரதி!

சாதிகள் இலையெனச் சமயங்கள் ஒன்றெனச்
சாற்றிய சமரசன் பாரதி!
நீதியைப் போற்றிடும் நெறிகளில் நின்றிட


நேர்வழி காட்டினான் பாரதி!
ஆதியும் அந்தமும் அற்றமெய் இறைவனை
அன்பினால் காணென்றான் பாரதி!
ஓதியே இன்புற உயர்ந்ததே கல்வியென
உரைத்தவன் தமிழ்க்கவி பாரதி!

பாவினைப் பாடியே விடுதலைப் பயிரினைப்
பாரினில் வர்த்தவன் பாரதி!
சாவினுக் கஞ்சிடாச் சமத்துவங் கண்டிடச்
சந்ததம் உழைத்தவன் பாரதி!
மேவிடும் மானுடம், தாயகம், தாய்மொழி
மேலெனக் கூறினான் பாரதி!
தாவிடும் கன்றுடன் தாயதன் மகிழ்வினைத்
தரணிக்குத் தந்தவன் பாரதி!



- 1998

# தேர்தல் நாடக மேடையில்...





தேர்தல் நாடக மேடை! - தமிழர்
தெருவில் வீசுது அரசியல் வாடை!
ஊர்கள் தோறுமே முழங்கும்! - பேச்சு
உரிமை பெருமையென் றுணர்ச்சியைத் தூண்டும்!

வீடு தேடியே வருவார்! - இவர்
வெட்க மின்றியே விருந்துகள் பெறுவார்!
நாடு வாழ்ந்திட உழைக்கும் - எனக்கு
நம்பிப் போடுங்கள் புள்ளடி என்பார்!

சரிகை வேட்டியும் அணிவார்! - கழுத்தில்
சால்வை யொன்றையும் சமர்த்தாய்த் தரிப்பார்!
உருகி உருகியே பேசும் - நெஞ்சம்
உண்மை யற்றது; அனைத்துமே வேஷம்!

மாற்றுக் கட்சியைச் சாடும் - இவரின்
மாய மாரீச மான் விளையாடும்
ஏற்றுப் பின்செலும் கூட்டம் - காக்கை
எத்தித் தின்றிடும் வித்தையில் நாட்டம்!

வண்ணப் போஸ்டர்கள் அடித்தே - அதில்
வாக்கு வேட்டையின் உத்திகள் பொதித்தே
கண்ணில் படும்படி ஒட்டும் - இவர்
கரன்சி நோட்டுகள் பலரையும் எட்டும்

சின்னப் பொடியளும் திரிவார் - சில
சீவன் போகிற கிழடுகள் நெளிவார்!
அன்னப் பொடிநடை மாதர் - ஏதும்
அவசியம் இருந்தால் அரசியல் காண்பார்!



சண்டித் தனஞ்செய் குண்டர் - கொஞ்சம்
சாத்வீக வழியில் நடந்திடும் தொண்டர்
முண்டு கொடுத்திட வருவார்! - இவர்தான்
மூண்டு எரிந்திட்ட இலங்கையின் புதல்வர்

கூடு விட்டுமே கூடு - இவர்
கொள்கை யின்றிப் பாய்ந்திட்ட மோடு!
நாடு பிழைத்திட வேண்டின் - இந்த
நல்ல மனிதரை அனுப்புவோம் வீடு

- 2015

## பகவான் புத்தரும் பாரினுக்கருளிய பலனோ?





பாவினைப் பாடியே சுதந்திரப் பயிரினைப்
பாரதி வளர்த்தது தவறோ? - விடுதலைத்
தீயினை மூட்டிட விக்டர் கியூகோ
விளம்பிய முறையென்ன குறையோ?
படையினை ஏவியே பைந்தமிழ்க் கவிஞனைச்
சிறையினுக் கனுப்புதல் நலனோ? - தூய
பௌர்ணமி நிலவினில் பகவான் புத்தரும்
பாரினுக் கருளிய பலனோ?

**- முதற்கவிதை - "சுதந்திரன்" - 1972**

(கவிஞர் காசி ஆனந்தன் மன்னாரில் கைதுசெய்யப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டபோது எழுதியது)

# நல்லை ஆதீனம்




**தொகையறா**

ஈழத் தமிழர்களின் இதயங்கள் கூடுமிடம்!
இன்பத் தமிழ்மலர ஈசன்மதம் வாழுமிடம்!
சூழும் வழிகளிலே தொண்டுபல செய்யுமிடம்!
சுவாமிநாதப் பெருமுனிவன் தொடக்கிவைத்த குருபீடம்!



---

ஞாலமீதில் என்றும் வாழ்கவே! - நல்லை
ஞான சம்பந்த நற்றமிழ் ஆதீனம்
(ஞால)

காலக் கடலில் கரைகடந்தே நின்று
கன்னித் தமிழோடு சைவப் பணிபுரிந்து
(ஞால)

வெல்லத் தமிழ்ச்சாறும் வேதப் பொருளாறும்
சொல்லச் சுவையூறும் சுவாமிநாதத் தம்பிரானாம்
நல்லைக் குருமணியின் நாமந்தனை நினைந்து
வல்லபணி யாற்றிநிதம் வான்மழை போல்பொழிந்து
(ஞால)

ஏழைஎளியவர்க் கிரங்கியே உதவிடவும் - அவர்
ஏக்கந் தனைத்தீர்த்து இன்முகங் காட்டிடவும்
வாழும் நெறிபுகட்டி வாய்மையிற் சேர்த்திடவும்
வண்மை திண்மையுடன் வளஞ்சுரந் தூட்டிடவும்
(ஞால)

# "கலைமலர்" நின்புகழ் வாழ்க!

கால நதியினி லாடி யென்றுமே
'கலைமல' ருன்புகழ் வாழ்க!
கோல யௌவனம் கொஞ்சும் மோகனம்
குறைவில் லாமலே திகழ்க!

நீல வானிலே நீந்தும் வெண்ணிலா
நிலமிசை தருமொளி யாகச்
சீல நல்லறம் சிறக்க மானுடச்
சிந்தனை விரித்தருள் புரிக!

காலைக் கதிரவன் சாலத் தனஞ்செயும்
காட்சியின் மாட்சியு மாவாய்!
வேலைத் தழுவிய வெற்றிச் செல்வியாய்
விளங்குக நீதியின் தாயாய்!



பாலைப் பொழிதரு பசுவைப் போலவே
பரிந்தறி வூட்டுமுன் பான்மை!
ஆலைக் கரும்பினை அமுதச் சக்கரை
ஆக்குவ துன்தொழில் வாண்மை!

ஆண்டு தோறுநல் லழகின் படைப்பிலே
அறிவின் சிகரமாய் உயர்க!
ஈண்டு நற்றமிழ் இதயம் மகிழ்ந்திட
இனிமை தந்துமே வளர்க!

கல்வி பயிற்றுநம் கலையின் கோவிலில்
காலங்கள் தோறும்நீ மலர்க!


காவிய ஓவியக் கலைஞர்கள் அறிஞர்கள்
கருத்தாம் மடியினில் தவழ்க!

புலரும் பொழுதினில் போயகல் பனித்துளி
போலவே தீமைகள் ஒழிப்பாய்!
அலரும் மலரினில் அறுகாற் பறவையாய்
அனைவர்க்கும் நன்மைகள் அளிப்பாய்!

கலைகளி னரசி கலைமக ளுறையும்
“கலைமலர்” நின்பணி வாழ்க!
நிலைபெறா துலகின் நித்தியப் பொருளாய்
நின்புகழ் நீடூழி வாழ்க!

**- “கலைமலர்” 2007 - 2008**

## பூமழை தூவி வாழ்த்திடுமே!



முல்லைப் பூப்போல் மணம் பெறுவோம்
முத்தமிழ் போலே புகழ் பெறுவோம்
எல்லை யில்லாக் கல்வி தனை
எத்துயர் வரினும் நாம் பெறுவோம்

ஒருவர்க் கொருவர் உதவி செய்வோம்
ஒற்றுமை யேபலம் எணவுணர் வோம்
பிரிவினை யெம்மை அணுக விடோம்
பெருமை யாய்வாழ வழி சமைப்போம்

பள்ளிக் கூடம் தனில் நல்ல
பழக்க வழக்கம் பயின்றிடுவோம்
அள்ளிச் சொரியும் அன்பி னாலே
ஆசிரிய ரோடு அக மகிழ்வோம்

நல்லறி வூட்டும் தெய்வங் களின்
நம்பிக்கை யாலே நலம் பெறுவோம்
அல்லவை விலக்கி அருள் கூட்டும்
ஆனந்த மடைந்து உயர்ந் திடுவோம்

எண்ணங் களால்நாம் இணைந்திடு வோம்
ஏற்றம் பெறநல் லுலகமைப் போம்
மண்ணில் காணும் வண்ணங் களாய்
மாணவர் நண்பர்கள் நாம் ஆவோம்

கட்டுப் பாட்டைப் பேணி நிற்போம்
காலம் முழுவதும் கற்றிடு வோம்
விட்டுக் கொடுத்து வாழ்வ தனால்
விளையும் நன்மைகள் பலவென்போம்!

அதிபர் ஆசிரியர் நல்லுற வும்
அறிவுள்ள மாணவர் நட்புற வும்
புதிய சமுதாயம் பூத்திட வே
பூமழை தூவி வாழ்த்திடு மே!

- 2008

# ஒருபாடல் என்காதில் ஒலிக்கின்றது!



ஒருபாடல் என்காதில் ஒலிக்கின்றது! - அந்த
உணர்ச்சியில் உள்ளமெல்லாம் வலிக்கின்றது!
(ஒரு)

திருநல்லூர்த் தெருமூண்ட தியாகத்தீ! - அதில்
திலீபனின் தற்கொடையாம் ஆகுதி எனும்
(ஒரு)


பாரத தேசம்தந்த பரிசல்லவா? - எங்கள்
பார்த்திபன் உயிர்கவர்ந்த கொடுஞ் சதியல்லவா?
யாரிதைப் பொறுப்பார்கள் இம்மண்ணிலே! - என்றும்
யாரிதை மறப்பார்கள் தமிழ் நெஞ்சிலே!
(ஒரு)

தமிழ்க்கோவில் தனில் வைத்த தீபம்! - அது
தாளாத புயலாலே அணைந்ததே சோகம்!
அமிழ்தூறும் மொழிகாக்கும் தேசம்! -- இனி
அடங்காது; ஒடுங்காது; ஆண்மையின் வீரம்!
(ஒரு)

இனங்காக்க நிலங்காக்க இரையானவன்! - தன்
இதயத்தை இரும் பாக்கிக் கல்லானவன்!
மனக்கோவில் தனிலென்றும் வாழ்கின்றவன்! - அந்த
மாவீரன் எமைக் காக்கும் துணையானவன்!
(ஒரு)

- 1990

# காந்தி தேசம் காட்டிய வழி



காந்தி தேசம் காட்டிய வழியில்
கண்ணியம் உண்டோ? கூறடா! - அந்தக்
கயமையினாலே தெய்வம் பிறந்த
கதையினை நன்றாய்க் கேளடா!
(காந்தி)

ஏந்தி நின்ற இலட்சியக் கனவுடன்
இருந்தது நோன்பு ஒரு பறவை! - அதன்
எண்ணங்க ளான வண்ணங்கள் சென்று
இடித்தது வலிய கொடும் புயலை!
(காந்தி)



பூம்புன லாடும் மாந்தளிர் மேனி
புவியினில் சருகாய்க் கருகியதே! - ஒரு
புல்லாங் குழலின் மெல்லிசை தவழ்கையில்
புல்லர்கள் சன்னதம் ஆடினரே!
(காந்தி)

நாம்தமிழ் உரிமை நாடிடும் வேளையில்
நரகா சுரர்கள் தோன்றினரே! - எம்
தீந்தமிழ்த் திலீபன் தியாகத்தி னாலே
தேசத்தில் மூண்டது பெருந்தீயே!
(காந்தி)

பார்கண்டு வியக்கும் போர்கண்ட வீரப்
படையணி படைக்கும் பரணியிலே - திலீபன்
வேர்கண்ட தமிழாய் விண்ணகத் துறைவான்
வென்றிடும் மானுடம் தரணியிலே!
(காந்தி)

- 1990

## வானுலகஞ் சென்றீரோ அம்மா?





ஆற்றுவாரின்றி அலையுமீழத் தமிழ்ச் சிறார்க்கு
ஊற்றுவா யாயிருந்து உயிர்கொடுத்த உத்தமியே!
சாற்றுஞ்சம யசமூகப் பணிபுரிந்த அன்னையுன்போல்
வேற்றொருவ ருளரோவிவ் விரிநீ ருலகிலம்மா!

தெய்வப் பணியும் திக்கற்றோர்க் குதவுபணியும்
உய்வதாம் நற்கருமங்கள் உதவுபணியும் உவந்து
ஐயங்கள் நீக்கிஅற மேபெரிதென அன்பாலருளி
வையகம் போற்றவாழ்ந்து வானுலகஞ் சென்றீரோ?

-"கலைமலர்" 2007 - 2008

(சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவு குறித்துப் பாடியது)

# அல்லைப்பிட்டி கறண்டப்பாய் கந்தசுவாமி துதி



கற்பகத் தருக்கள் மேவும்
கடற்கரை மணலும் சூழும்
அற்புத மான இயற்கை
அழகுசெய் அல்லைப் பிட்டி
நற்றவ முடைய மாந்தர்
நாளெலாஞ் சென்று வணங்கும்
கற்பனை கடந்த பொருளாம்
கறண்டப் பாய்க்கந்தா போற்றி!



பிறந்தது முதலா யுந்தன்
பேரினைச் சொல்லிச் சொல்லித்
துறந்திடா அன்பு வைத்துத்
துதிக்கின்ற பொழுதி லெல்லாம்
நிரந்தரம் நீயே யென்று
நெஞ்சிலே நினைவு கொண்டேன்!
இறந்திடும் போது முந்தன்
இணையடி துணைதந் தருள்வாய்!

- 2000

# மார்கழி கிறிஸ்மஸ் பெருநாள்



புனித மேரியின் புதல்வன்
பூமியிற் பிறந்த பொன்னாளை
மனித குலமொன்றி வாழ்த்தும்
மார்கழி கிறிஸ்மஸ் பெருநாள்

மாட்டுத் தொழுவத்தில் பிறந்து
மரணத்தின் பின்னுயிர்த் தெழுந்து
வாட்டிய துயரினை வென்று
வாழ்வினைக் காட்டிய வழிநாள்

ஏரோது மன்னனின் ஆட்சி
இயற்றிய கொடுமையின் காட்சி
வேரோடத் தீமைகள் களைந்த
விண்ணகத் தரசின் திருநாள்

இனமத பேதங்க ளின்றி
இதயங்கள் அன்பால் ஒன்றி
மனுக்குலம் மண்ணில் தழைக்க
மார்கழி தந்தது இந்நாள்


உலகினில் யேசுக் கிறிஸ்து

உதித்திட்ட கிறிஸ்மஸ் நாளை
அழிவிலா ஆனந்தத் தோடு
அனைவரும் கொண்டாடி மகிழ்வோம்

பாலகன் யேசுவின் பிறப்பு
பாரினுக் குணர்த்திய பொறுப்பு
வாழ்வதன் உயரிய மாட்சி
வையகந் தனிலிறை ஆட்சி

**- "வலம்புரி" 25.12.2013**

# கந்தனின் தேரோட்டம்



கந்தனின் தேரோட்டம் காணுங்கள்! - அந்தக்
காட்சியிலே மெய்ம்மறந்து கவலை தீருங்கள்!

---



பந்தபாச வினையகலப் பாடுங்கள்! - முருகன்
பாதமலர் தஞ்சமென்று பணிந்து நில்லுங்கள்!

---

வடம்பிடித்துத் தேரிழுக்க வந்து கூடுங்கள்!
வானவரைக் காத்தோனிடம் வரத்தைக் கேளுங்கள்!
இடம்பிடித்துக் கோயில்கொண்ட எழில்சேர் நல்லையில்
இன்பத்தே னூற்றவனே என்று உணருங்கள்!


(கந்தனின்)

வாடுகின்ற உயிர்ப்பசிக்கு வானமழை போன்றவன்!
வள்ளி தெய்வ யானைமண வாளனாக ஆனவன்!
தேடுகின்ற தத்துவத்தின் மெய்ப்பொருளா யுறைபவன்!
தேரிலேறி வருகிறான்! தெரிசனமும் தருகிறான்!

(கந்தனின்)

**- "தினக்குரல்" 19.08.2009**

# யாரோடு பேச வந்தோம் முருகா?





தேரோடும் வீதியிலே நீரோடும் விழிகளுடன்
யாரோடு பேசவந்தோம் முருகா! கொடுஞ்
சூரோடு பகைமுடித்த குமரா!

(தேரோடும்)

ஊரோடு உறவிழந்து உள்ளதெல்லாம் தானிழந்து
சீரான வாழ்விழந்து செய்வதறி யாமல்நின்று

(தேரோடும்)

நெஞ்சமெல்லாம் நீயாக நிம்மதியை நாடிநின்று
தஞ்சமென வருவோர்க்குத் தாயாக அருள்வாயென்று

(தேரோடும்)

வேரோடி நிமிர்ந்ததெல்லாம் வீழ்ந்துவிடக் கண்டிருந்தும்
ஊர்கூடித் தேரிழுக்கும் உன்னதங்கள் மாறாமல்

(தேரோடும்)

பஞ்சம்பிணி நோய்பகைமை பதவிவெறி சுயநலத்தால்
அஞ்சுகின்ற இழிநிலையும் அழிந்துவிடச் செய்வாயென்று

(தேரோடும்)

கள்ளிச்செடி மீதினிலே முல்லைமணம் காணுகின்ற
உள்ளம்வளர் நல்லவர்கள் ஓடியோடி வாராரென்று
(தேரோடும்)

கொஞ்சிவரும் தென்றலிலே குளிர்நிலவின் தழுவலிலே
வஞ்சமின்றி வாழ்ந்த மண்ணின் வரிசைகெட்டுப் போனதென்று
(தேரோடும்)

ஆறுமுக சாமியென்று அழகுரதம் மீதிவர்ந்து
நீறுபட வெவ்வினையை நீயழித்து விடுவாயென்று
(தேரோடும்)

- **"வலம்புரி" 19.08.2009**

## "வலம்புரி" நீடூழி வாழ்க!




வலம்புரி முரசம் வழங்கிய ஓசை
வாய்த்தது பதினான் காண்டுகள்
நலம்புரி தமிழர் பத்திரிகை இதுவென
நயந்திட நாடிட நன்றாய்
பலம்புரி பணியால் பலரையு மீர்த்து
பண்கனி பாடலாய்த் திகழ்ந்து
குலம்புரி குணத்துக் கொள்கையா லுயர்ந்தாய்!
குன்றாத் தவத்தாய் வாழ்க!

பாடறிந் தொழுகும் பண்பினாற் சிறந்த
பழந்தமிழ் யாழ்ப்பாண மண்ணின்
கேடினைத் திருத்தக் கிளர்ந்தெழு ஞாயிறாய்
கேண்மை வாய்மை பூண்டாய்!
ஊடலும் கூடலும் உன்னிடம் மாந்தர்
உளங்கொளக் கண்டுற்ற போதும்
வாடலும் உயிர்ப்பும் 'வலம்புரி' க் கில்லை
வையகம் பயனுற நின்றாய்!

மதங்களின் ஒற்றுமை மண்ணில் மாண்புற
மற்றவர் மொழிதனை மதித்திட
பதந்தரும் இறைநலம் பரவச மளித்திடப்
பாரினில் மானுடம் தழைத்திட
நிதந்தரும் செய்திகள், கட்டுரை, கவிதை
நேசமாய் தென்கச்சி தகவல்
இதந்தரப் படிக்கும் ஏடென மிளிர்ந்தனை
இகமதில் பல்லாண்டு வாழ்க!

துணிவு, நேர்மை, தொழிலில் தூய்மை
துன்பத்தைத் தாங்கும் வலிமை
பணிவு, அன்பு, எவரையும் சமமாய்ப்
பரவிடும் நீதியின் பார்வை
அணிசெய் பெரியோர், கற்றோர், மற்றோர்
அரவணைத் தேகிடும் சீர்மை
வணிக நோக்கினை வாய்மை வென்ற
'வலம்புரி' என்றும் வாழ்க!



கசப்பு மருந்தை இனிப்புட னூட்டிக்
கவரும் ஆசிரியத் தலையங்கம்
பசப்பு இன்றிப் பண்புமை யூறிய
பயன்தரும் எழுத்தின் அரங்கம்
நிசத்தில் நிகழும் நெடுந்துய ரங்கள்
நினைவை வாட்டும் நிகழ்ச்சிகள்
வசத்தில் மயக்கும் வர்த்தக விளம்பரம்
'வலம்புரி' நாளிதழ் வரவு

இன்னல்கள் சூழ்ந்த இருண்ட வேளையில்
இலங்கைத் தமிழரின் குரலாய்

பன்னலம் மேவிய பத்திரிகைத் துறையில்
பதித்த தடத்தின் பயணம்
தன்னலங் கருதாத் தகைமையில் தொடர்ந்து
தரணியில் பத்துநான் காண்டுகள்
வன்னத் தமிழ்மன வண்டலில் அசைகின்ற
'வலம்புரி' ஏடே வாழ்க!


சங்கத் தமிழின் நெய்தல் மண்ணில்
சங்கென ஆர்த்ததும் வலம்புரி!
மங்காத செல்வம் மனையினில் விளங்க
மகத்துவம் பெற்றதும் வலம்புரி!
எங்கும் நிறைந்த இறையோன் மாயனின்
எழிற்கரத் திருந்ததும் வலம்புரி!
இங்கும் தமிழரின் இதயத் துடிப்பென
இயங்கிடும் நாளிதழ் 'வலம்புரி'!



வற்றாத ஊற்றாய் வளர்பிறைக் கீற்றாய்
'வலம்புரி' நீடூழி வாழ்க!
சற்றேனும் விலகாச் சத்தியம் காத்து
சரித்திரம் படைத்து நீ வாழ்க!
முற்றாத மனத்தினர் முழுமனித ராகிட
முழுநிலா வெனப்பணி புரிக!
பற்றேனு மின்றிப் பத்திரிகா தர்மப்
பாதையில் பயணம் தொடர்க!

**-"வலம்புரி" 20.12.2013**

## ஆஸ்பத்திரி தந்த அனுபவம்



ஆஸ்பத்திரியின் பிரதான வார்டுகளில் ஒன்று
எதிர்கால யாழ்ப்பாணம் எப்படி இருக்கும்
என்பதை எடுத்துக்காட்டும் மாதிரி அது
அடுக்கிய பலமாடிகளின் உச்சியில் அதன் இருப்பிடம்
மேலே ஆகாயம் பரந்து கிடப்பதால்
ஆண்டவனை விரைவாக அடையத் துடிக்கும்
ஆத்மாக்களின் சங்கமமது
வழுக்கி விழுந்த வயதானவர்களின்
ஓயாத ஒப்பாரி ஒருபுறம்
மாடுகளும் நாய்களும் மல்லுக் கட்டியதால்
தடுக்கி விழுந்து எலும்புகளும் நரம்புகளும்
இடம்மாறி ஒடிபட்டதால்
இரத்ததானம் செய்தவர்களின்
ஏக்கமும் அழுகையும் ஒருபுறம்
முள்ளந்தண்டின் முனைப்பு விலகியதால்
மெல்லத் தானும் நடக்க முடியாத
விறைப்புடையோர் வேதனையின்
இராகமாலிகை ஒருபுறம்
லைசன்சு இல்லாத மோட்டார் சைக்கிள் சவாரியால்

பொலிசார் கண்பட்டுப்
போனபோக்கில் பறந்தோடி
பொல்லாங்கு தேடிய விடலைகள் ஒருபுறம்
போதை தலைக்கேற வாகனம், ஓட்டுவதை
அறியாமல் இன்னொன்றுடன்
மோதி முடிவுகாணத் துடித்தவர்களின்
முகாரிகள் ஒருபுறம்
வாகன விபத்துக்களால் வாழ்க்கையைத்
தொலைக்கத் துடிதுடித்த
இளமை சதிராடும் வாலிபர்களின்
கனவுகளைக் கலைத்தபடி அந்த வார்ட்
பகலிலும் இரவிலும் சுறுசுறுப்பாய்
பன்முகப் பரிமாணங்களுடன்.....
சொன்னபடி கேட்காத நோயாளர்களைச்
சுகப்படுத்த முனைகின்ற வைத்தியர்கள்
தன்னலங் கருதாமல் தம்மால் முடிந்தளவு
பயங்காட்டி நயங்காட்டி
பக்குவப் படுத்தி நிற்கும் தாதிமார்கள்
அந்நியம் அணுகாமல் உறவின்
நிழல்களாய் ஆற்றுப்படுத்தும்
சிற்றூழியர்கள் பணி தொடரும்
இவற்றினிடையே
வெம்ப வைக்கும் பேச்சுக்களால்
விழிநீர் சொரியவைக்கும்
இவர்களில் சிலர் எல்லா வகையிலும்
திரும்பவும் மனிதர்முன்
தெய்வங்கள் தோற்றதென
உயிர்களைக் காப்பாற்றுதல்
பிறவியின் பெருங்கடனென நினைத்துப்

பணிபுரியும் வைத்தியர்கள் பலபேர்
ஆனாலும் வெள்ளாடுகள் மத்தியிலும்
சில கறுப்புகளும்
எதையும் தாங்கும் இதயமுடையோர்
நோயாளர்கள் மட்டும்தான் எனக்கருதிக்
கனியிருக்கக் காய்கவரும்
கடமையாளர் சிலபேர்;
சகல பணிநிலைகளிலும்,
என்செய்வோம்? இதயமற்ற இவர்கள்
எப்படியோ நுழைந்துவிட்ட
சமூகத்தின் சாபக்கேடுகள்
தென்றலும் புயலும் மாறிமாறி வீசுவதற்கு
இந்த வார்ட்டே சாட்சியாகும்
இன்பமும் துன்பமும் ஒரு நாணயத்தின் இருபக்கமாய்
இணைந்திருப்பதற்கு இதுவே சத்திய உதாரணம்
என்ன இருந்துமென்ன? எப்படித்தான்
மருத்துவசேவை நடந்துமென்ன?
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்....
முக்கி முக்கி முக்காற் கிணறுபாய்ந்து பயனென்ன?
மனிதர்கள் எவராயினும் மனிதத்தை நேசிக்க வேண்டும்
அதைத்தான் இந்த வார்ட் உணர்த்தி உயர்ந்து நிற்கிறது.



**- "உதயன்" 11.10.2015**

## ஈழலா இன்பமே வாழி!



தவலருந் தொல்புரத் தமிழ்ப்பதி தன்னில்
    தழைத்ததோ ரறப்பணி நிலையம்
சிவபூமி முதியோ ரில்லம் சிறந்தநற்
    சேவையி லாண்டுகள் பத்தினை
அவதிப் படுகின்ற அன்னையர், தந்தையர்,
    ஆதரவற் றோரை அணைத்து
உவகைகொள் உளமுடை யோரா யவர்வாழ
    உதவிற்று; கருணையா லுயர்ந்து

இரண்டு ஆயிரத் தேழா மாண்டின்
    இசைந்த ஏப்பிரல் ஏழில்
வரண்ட பாலையில் வார்த்திட்ட நீர்போல்
    வள்ளல் பாலச் சந்திரனின்
திரண்டபே ரிரக்கம் தெய்வீகத் தொண்டாய்த்
    திருமுருகப் பெருமகன் தலைமையில்
முரண்படா தெழுந்த முன்னேற்றத் தினாலே
    முதியோ ரில்லம் முகிழ்த்ததே!

வண்மை வளமுடன் வற்றாத இறைபக்தி
வரிசைதரு கல்வியுங் கீர்த்தியும்
தண்மை நெஞ்சுடன் தாளாண்மை பேராண்மை
தளர்ந்தவர்க் கருளிடும் தயையும்
உண்மை உழைப்பும் ஊக்கமும் ஆக்கமும்
உலகினி லுயர்வுற்ற யாழ்மண்
அண்மைய போரினால் அனைத்தையு மிழந்து
ஆதரவற்று நலிந்தோர் பெருகினர்

பிள்ளைகள் கைவிட்ட பெற்றோர் ஒருபுறம்
பிஞ்சுக ளிலாதோர் ஒருபுறம்
வெள்ளம் வருமுன் அணைகட்டார் ஒருபுறம்
வேதனையே வாழ்வானோர் ஒருபுறம்
உள்ளும் உளநிலை உடைந்தோர் ஒருபுறம்
உற்றவ ரற்றோர் ஒருபுறம்
பள்ளந் தனைநாடிப் பாயும் வெள்ளமாய்ப்
பரிந்தன்பு காட்டியது சிவபூமி

உணவு உடைகளுடன் உறையுளும் தந்தவரை
ஒருகூட்டுப் பறவைகளாய் உயிர்வாழக்
கனவு நிறைவேறக் காலத்தை வென்று நிற்கக்
கஷ்டத்தில் கைகொடுத்துக் காப்பாற்றத்
தினமும் உழைக்கின்ற திறன்மிக்க சேவகர்கள்
தித்திக்கும் வார்த்தைகளா லுரையாடி
மனமும் வெளுத்திருக்க மகிழ்ச்சியும் மருவிநிற்க
மாண்புசெய் முதியோர் இல்லம்

வழிபாடு செய்வதற்கு வைரவர் ஆலயம்
வாசிப்போர் பயனுற நூலகம்
அழியாத தமிழ்க்கலைகள் ஆனந்தந் தந்திட
அடிக்கடி நிகழ்ச்சிகளின் ஆற்றுகை

பொழிலொன்று இடங்கொண்டு புதுமணம் பரப்பிநின்று
பொழுதுபோக் குக்கெனப் புத்துயிர்க்கும்
எழில்கொண்ட கீரிமலை இறைவனைத் தரிசிக்க
ஏற்றி யிறக்குமொரு பேருந்து

உள்ளம் நல்லதாய் உவப்புட னிருந்தாலே
உடலும் உறுதிபெறும் எனவோர்ந்து
அள்ளக் குறையாத ஆன்மீக நெறிகாட்டி
ஆறுத லளித்து அரவணைத்து
கள்ளத் தனமணுகாக் கருணையே வடிவாகக்
காணும் சிவபூமி முதியோர்
இல்லம் வளர்ந்து எழுபத் தொன்பதுபேர்
இருப்பிடமாய்த் திகழ்கின்ற தின்று

தம்பதியர் சிலரிருக்கத் தனித்தவர் பலரிருக்க
தரைநீத்து முடிவுகண்டார் எண்ணிக்கை
ஐம்பத்து இரண்டாகும்; அவருள்ளும் முப்பத்து
ஆறுபேர் அந்திமச் சடங்கினை
எம்பெருமா னருளிதென்று இயற்றினார் திருமுருகன்
எல்லோர்க்கும் வாய்த்திடுமா இப்பேறு?
அம்புவியை ஆட்டிவைக்கும் ஆலகண்டன் திருவுளத்தை
ஆரறிவார்? அவர்வழியே இப்பணியாம்

மகிமைபெறு முதியோர் தொண்டினால் யாழ்ப்பாண
மண்ணில் தலைநிற்கும் சிவபூமி
அகிலமுணர் அன்பின் ஆட்சியால் ஆதரவை
ஆன்ற வழிகளில் ஆட்படுத்தி
புகலரணாய் விளங்கிப் புண்பட்ட நெஞ்சினரைப்
போற்றி ஆற்றுகின்ற தாயாகி
இகமதிலே பத்தாண்டை இற்றைக்கு நிறைவாக்கும்
ஈடிலா இன்பமே வாழி!

செஞ்சொற் செல்வருடன் சேர்ந்தியங்கு நிர்வாகச்
சீர்மையா லில்லம் சிறக்கவே
தஞ்சமென் றேகிநிற்கும் தளர்வுற்ற வயோதிபர்கள்
தண்ணொளி பெற்றுதுயர் நீங்கவே
அஞ்சலென அபயம் அளிக்குமொரு பெருங்கருணை
ஆகாய மளாவி உயரவே
சிந்தைதனில் நிறைந்ததிருக் கொன்றைமலி செஞ்சடைநீர்ச்
சீர்பொலியும் சிவபிரானே யருள்வாயே!

**- சிவபூமி முதியோர் இல்லம் பத்தாவது ஆண்டு சிறப்புமலர்**
**ஏப்பிரல் 2017**

# புத்தரைப் போற்றுதும்!



புத்தரைப் போற்றுதும்! புத்தரைப் போற்றுதும்!
புவிமிசை யவர்தந்த பொன்மொழி போற்றுதும்!
இத்தரை மீதினில் இகபர ஆசையை
இதயத்தா லெறிந்திட்ட ஏந்தலைப் போற்றுதும்!

சத்தியம் தருமமும் சமாதானம் அன்புமே
சந்ததம் வாழ்வெனச் சாதித்த மாண்பினர்!
நித்தியப் பேரொளி நெஞ்சிலே கொண்டவர்!
நிறைநிலா வேளையில் நிம்மதி கண்டவர்!

நோயும் மரணமும் நுடங்கிடும் முதுமையும்
சாயும் உடலதன் சாரமா யானபின்
தாயும் பிள்ளையும் தமர்பிறர் யாவரும்
தங்கிடா வாழ்வினைத் தரணியில் ஏற்றவர்!

காலொடிந்த ஆட்டுக் குட்டியைக் கண்டுமே
கருணையோ டரவணைத்த காருண்ய சீலரிவர்!
வாழ்வொடிந்த மகனுயிர் வரவழைக்கக் கேட்டதாய்க்கு
வையகத்தின் நியதிதன்னை வாஞ்சையோ டுரைத்தவர்!

பஞ்சசீல தத்துவத்தைப் பாரினுக்கு உணர்த்தினார்!
பாதங்களால் நடந்துசென்று பாழ்மனங்கள் திருத்தினார்!
வஞ்சமிலா வாழ்க்கையதன் வண்ணங்களைக் காட்டினார்!
வாரிபோல மும்மணிகள் வாழ்ந்திடவே சாற்றினார்!

துன்பத்திற்குக் காரணம் தொடருமாசை என்றவர்
தூயவழிகள் மூலமாசை தொடராதெனக் கூறினார்!
அன்புகொண்டவருரைத்த அமுதமான வார்த்தைகள்
அகிலம்வாழ அருளிநின்ற ஆயுட்கால உண்மைகள்!

புத்தர் போதிமாதவர் புனிதஞான சாக்கியர்
சித்தமகிழப் போற்றுகின்ற அரசகுல சித்தார்த்தர்
சத்தியத்தின் காவலர்; சார்ந்துநின்று அவர்வழியில்
உத்தமராய் நடப்பவர் உலகில் மனிதராவரே!

- 2015

## குடமுழுக்கினால் உலகம் உய்யுமே!




தெல்லிப்பழைத் துர்க்கா தேவியின் திருக்கோயில்
தென்றிசைக் கோபுரக் குடமுழுக்கு
தொல்புகழ் ஆண்டெனத் தோற்றிய துர்முகி
தூயதைத் திங்களின் தைப்பூசம்
புல்லிய வளர்பிறை புலர்காலைப் பொழுதினில்
புண்ணிய காரியம் பொலிவுற
நல்லிசை வாத்தியம் நான்மறை முழங்கிட
நடைபெறத் திருவருள் நாடிற்றே!

தாயின் மடியினில் தழைத்திடு மழலைபோல்
தண்ணொளி வெண்ணிலா தருவபோல்
பாயும் அருவியின் பயன்விளை கின்றபோல்
பங்கய மென்மலர்ப் பான்மைபோல்
ஒய்விலா துழைத்திடும் உழவரின் உறுதிபோல்
ஒண்டமிழ் மொழியதன் உயர்வுபோல்
ஆயபே ரன்புசெய் அன்னையின் கோபுர
ஆகமகும் பாபிஷேகம் அமையுமே!

சின்னதாய் அமைந்து சீரினாற் பொலிந்து
சிலபத்து ஆண்டின்பின் உயர்ந்து

அன்னையார் தங்கம்மா அவர்தம் தலைமையில்
ஆலய அறங்காவல் சபையினர்
முன்னுயர் பணிகளால் மூச்சுடன் எழுந்து
மூலக் கோபுரம், மண்டபம்
இன்னறுந் தீர்த்தக் கேணியும் இயற்றி
இறைவியெம் துர்க்கா இருந்தனள்

ஆதர வற்ற பெண்களின் நலனுக்
கானதோர் மகளிர் இல்லம்
தீதிலா அறிவைத் திரட்டி யே நல்கத்
திகழ்ந்தது நூலக மொன்று
வாதனை செய்யும் வருத்தங்கள் போக்க
வந்தது ஔடத சாலை
சாதனை படைத்த சரித்திரம் துர்க்கா
சக்தியின் சந்நிதி யன்றோ!



துர்க்கை யம்மனைத் தொழுபவர் பசியால்
துவண்டிடக் கூடாதெனக் கருதி
அர்த்தமோ டன்ன தான மண்டபம்
அமைத்தே அருஞ்செய லாற்றி
நர்த்தன மாடிடும் நளின சிங்கார
நாயகி ஆலயந் தன்னில்
மர்த்தன மிடுவாள் மலரடி பணிய
மலர்ந்தது மணிமண் டபமாம்

தெல்லியூர் நாடியே தெரிசனம் பெற்றிடத்
திசையெங்கு மிருந்து வருவார்
வல்வினை பொடிபட வரம்வேண்டித் துர்க்கையை
வாயாரப் பாடி மகிழ்வார்

அல்லதை ஆற்றிடும் அழுக்குறு மனத்தினில்
அமைதியை அன்பினை அருளப்
பல்வித மாகவே பரவியே தேவியைப்
பார்த்ததும் கண்ணீர் சொரிவார்

இதுபோல ஒருதலம் ஈழத்தில் இலையென
இதயத்தாற் பேசும் மாந்தர்
அதுபோல ஆயிரம் அறப்பணி ஆற்றிடும்
ஆலயம் உளதோவெனக் கேட்பார்
மதுவுண்ட வண்டாகி மகோற்சவ காலத்தில்
மண்ணுளோர் அன்னையைக் கண்டு
எதுவந்த போதிலும் எழில்துர்க்கை யிருக்கின்றாள்
எமக்கேது? இனித்துயரம் என்பார்



ஆறுகாலப் பூசையும் ஆன்மீக சேவையும்
அறப்பணி ஆற்றிடும் நன்மையும்
மாறுபடா மனத்தராய் மக்கள்வந் திறைஞ்சிடும்
மாட்சியும் துர்கையின் ஆட்சியும்
ஈறிலாப் பெருமாட்டி எங்கள்சிவத் தமிழ்ச்செல்வி
இணையற்ற அருட்பணியின் ஈகையும்
பேறினாலவர் பின்வந்த பெருந்தலைவர் திருமுருகன்
பேணுகின்ற பெருந்தவமும் பெருகவே!

விரைகமழ் மலர்கள் விரவிய சூழல்
விண்ணுற வோங்கிய தருக்கள்
தரையெலாம் வெண்மணல் தடவிய கோலம்
தாவிடும் நாதஸ்வர கானம்
நிரை நிரை யாய்வரும் அடியவர் நேர்த்தி
நின்றொளிர் கோபுரக் கீர்த்தி

உரையுணர் விறந்து அன்பர் அன்னையை
உள்ளத்தால் வணங்குவர் உண்மையாய்!

உலகம் எங்கும் உன்னதச் சைவர்கள்
உவந்தநல் லுதவிக ளோடு
நிலைபெற்ற துர்க்கையின் நீடிய பணியொன்று
நிறைவேற அன்னையருள் புரிந்தனள்
கலைநின்ற பஞ்சதளக் கவினுறு கோபுரம்
காலத்தைக் கடந்து நிற்கவே
சிலமாத முயற்சியால் செய்தே முடித்தனர்
செஞ்சொற் செல்வரின் தலைமையில்!

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
கொண்டவூ ரென்றும் வாழும்
மூபுர மெரித்த முன்னோன் தேவி
மூல மூர்த்தமாய் ஆனகோயில்
மாபுரம் துர்க்கா வெனமாறிய மண்ணில்
மகா கும்பா பிஷேகம்
சீபுரத் தென்றிசைக் கோபுரம் காணவே
சிந்தை குளிர்ந்து சிறக்குமே!

அந்தணர் அருமறை மந்திரம் ஓதிட
ஆலய மணிகள் ஓசையிட
சிந்தைகொள் திருமுறைப் பனுவல்கள் ஒலித்திடச்
சீருடன் வாத்தியம் முழங்கிட
வந்தனை செய்து வாழ்த்திடு மடியார்
வாயினு மனத்தினு பக்தி
முந்துறத் துர்க்கை தென்கோ புரக்குட
முழுக்கினா லுலகம் உய்யுமே!

**-"அருள் ஒளி" - தென்கோபுரக் கும்பாபிஷேகச் சிறப்புமலர் -**
**09.02.2017**

# உன்னருள் கிடைத்தால் நாம் உய்வமே!



**பல்லவி**

தெல்லிப் பழையுறை தெய்வமே! - துர்க்கா
தேவி யுன்னருள் கிடைத்தால்நாம் உய்வமே!
(தெல்)



**அனுபல்லவி**

அல்லல் அகற்றிடும் அன்னையே! - உந்தன்
அடியிணை தொழுபவர்க் காகாததொன் றில்லையே!
(தெல்)

**சரணங்கள்**

பாம்புப் புற்றுகள் பற்றைகள் படர்ந்ததோர்
பழந்தமிழ் மண்ணைநீ பார்த்திடங் கொண்டாய்!
வேம்பும் பனைதென்னை விளங்கிடும் சூழலில்
விருப்புடன் சிறுகொட்டிற் கோயிலுனக் கமைத்தார்!
(தெல்)

ஆரா வமுதென அடியரைக் காத்திடும்
பேரா யிரமுள பெருமாட்டி யுன்கோயில்
சீராய் வளர்ந்திடச் சிந்தனை செய்தோர்முன்
பாராள் யோகமுனி பக்குவம் சாற்றினார்
(தெல்)

கைப்பிரம் பொன்றெடுத்துக் காசினிமீ தடித்தடித்துக்
கந்தபுரா ணம்படிக்கக் காரியம் நலமெனச்
செப்பிய மொழிகேட்டுச் செயற்படத் தொடங்கவே
இப்புவிமே லுயர்ந்து எழுந்ததுன் திருக்கோயில் (தெல்)

செல்வி தங்கம்மா சேவையால், தலைமையால்
செஞ்சொற் செல்வரின் சிறந்தநற் றொண்டினால்
பல்வித அன்பர்கள் பரவிய பக்தியால்
பாரினில் துர்க்கா புரம்பேர் பெற்றதே! (தெல்)

கருவறை, மண்டபங்கள் கலைநிமிர் கோபுரம்
அருமறை யாகம விதிப்படி அமைந்தன
திருவருள் பாலிக்கத் தென்றிசைக் கோபுரம்
திடீரென எழுந்தது தேவியுன் கோயிலில் (தெல்)

வடதிசைக் கோபுர வண்ணம் கண்டிட
வள்ளன்மை கொண்டோர் எண்ணம் சிறந்திட
இடர்களைந் தன்பர்க் கின்னருள் ஈந்திடும்
ஈஸ்வரி யுன்னருளால் இறைபணி தொடங்கிற்றே! (தெல்)

ஆரணங்க ளறியாத அன்னை துர்க்கையுன்
ஆலய மகோற்சவம் ஆவணித் திங்களின்
பூரணையிரு நாள்முந்திய திருவோணத் தீர்த்தமொடு
பொருந்திய பன்னிரு தினங்களும் பொலிவுறும் (தெல்)

சக்தியுன் இருப்பிடம் சகலர்க்கும் சமத்துவம்
பக்திகொண் டேதுதிப்பவர் பரிபாலனம் உன்வசம்
முக்திதரும் தாயும்நீ! மூலமுதல் முடிவும்நீ!
எத்திசையும் இறைஞ்சுகின்ற இறைவி துர்க்கா தேவியே!
(தெல்)

- "அருள் ஒளி - மகோற்சவச் சிறப்புமலர்" 2017

# முதியோரைக் காத்திடுவோம்!



முதியோரை என்றும் காத்திடுவோம்! - அவர்
முகமலர, மகிழ்வடையப் பணிசெய்வோம்!

(முதியோரை)

உயிரைத் தந்துஎமை உருவாக்கினார்! - தம்
உதிரம் கொடுத்து வளர்த்துவிட்டார்!
பயிரை வேலி அழிப்பதுவோ? - பெற்றவர்
பதைத்திட நாமினி வாழ்வதுவோ?

(முதியோரை)

எத்தனை முதியோர் இல்லங்களில் - மனம்
ஏங்கி யழுவதைப் பார்த்திடுவீர்!
அத்தனை துன்பம் அவர்களுக்கு! - கண்டும்
ஆனந்தம் வருமா எங்களுக்கு?

(முதியோரை)

கண்கண்ட தெய்வமாம் முதியவரை - அவர்
காலடி சுவர்க்கம் கண்டவரை
விண்கொண்ட தெய்வம் வாழ்த்தி நிற்கும்! - எந்த
வேளையும் துணையாய்க் காத்துநிற்கும்!

(முதியோரை)

உலகப் பெருமன்றம் ஐ.நா.வும் - அக்டோபர்
ஒன்றாந் தேதியை ஒதுக்கிவைத்தார்!

நிலவும் முதியோர் தினமென்றே! - நெஞ்சில்
நினைத்து உதவிட வழிசெய்தார்!

(முதியோரை)

பெற்றவர், பெரியோர் முதியவரை - நாமும்
பேணிக் காத்து அருள் செய்வோம்!
கற்றவர் மற்றோர் யாவருமே - இந்தக்
கருணைப் பணியில் இணைந்திடுவோம்

(முதியோரை)

- 2015

# கவியரங்கக் கவிதை

*நல்லூர்ப் பிரதேச செயலகம் சார்பிலே*
*கலாசாரப் பேரவை களிப்புடன் எடுக்கின்ற*
*நல்லதொரு கலாசார விழாவின் முதல்நாள்*
*வல்லதொரு இளைஞராய் வாய்த்திட்ட தலைவரே!*

*ஆசியுரை நல்கிய ஆன்மீகக் குருமாரே!*
*பேசரிய பெண்மணியாம் பிரதம விருந்தினரே!*
*மாசிலாப் பணிசெயும் சிறப்பு விருந்தினரே!*
*மாண்புறு கலைஞர்களே! மகிழவைக்கும் மாணவரே!*

*ஆர்வத்தோ டிங்குவந்து அணிசெய்கலா ரசிகர்களே!*
*ஓர்மத்தோ டோடியாடி உழைத்துநம் கலைவளர*
*வேரான நல்லூர்ப் பிரதேச செயலரே!*
*வேறுபடா மனமுடைய செயலகச் சமூகமே!*



*கவியரங்கம் கேட்கவந்த கலையுள்ளங் களுக்கெங்கள்*
*கரங்கூப்பி மனமுவந்த வணக்கம் கூறுகின்றோம்!*
*புவியரங்கம் தனில்கவிதை புகழ்மிக்க தெனஅறிவீர்!*
*புதுமையிது! இங்கும்சில கவிதைகளால் இன்புறுவீர்!*

*"புலரும் பொழுதும் புனித உணர்வும்"*
*மலரும் தலைப்பில் மாண்புடைய ஆசான்கள்*
*கிளறும் இளமைக் கிளுகிளுப்பு உடையவர்கள்*
*வளரும் பயிர்களிவர் வழங்கிடுவார் கவிதைகளை*

*வயிறு மட்டும் வாழ்க்கை எனநினைத்துக்*
*கயிறு திரிக்கும் கடமையாளர் பலருள்ளே*
*உயிராம் தமிழையும் உணர்வாம் கலையையும்*
*பயிராய் வளர்த்திடப் பணிசெய்வோர் வாழும்மண்!*

வீர சங்கிலியன் விளைத்திட்ட சரித்திரத்தை
ஆரத் தழுவிநின்று அழகுசெய்து பார்க்கும்மண்
சூரர் தமையழித்த சுடர்வேலன் நல்லூரில்
பார மனத்தோடு பக்தியால் பரவும்மண்!

கொக்குவில் கோண்டாவில் குலவுவண் ணார்பண்ணை
மிக்கதிரு நெல்வேலி மீதுயர்கல் வியங்காடு
தக்கதிரு நல்லூரும் தழுவுஅரி யாலையொடு
பக்கமாம் ஆனைக்கோட்டை பதிகொண்ட பிரதேசம்!

நற்றமிழர் வாழுமிடம்! நல்லகலை வளருமிடம்!
புற்றரையின் பனிபோலப் பொய்மைகள் மாயுமிடம்
செற்றமிலாக் கல்வியொடு சிறந்திடும் ஆன்மீகம்
வற்றாத ஈகைவளம், வணிகவளம் கொண்டமண்!



பெற்றவரைக் கொல்கின்ற பிள்ளைகள் இங்கில்லை!
பெண்டாட்டி பலகொள்ளும் பிசாசுகளும் இங்கில்லை!
உற்றவரை வழிமறிக்கும் உன்மத்தச் செயலில்லை!
உரப்பையில் சிசுபோட்டு உதறிவிடும் செயலில்லை!

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ளோர்
வல்லவர் நல்லவர் வறியவர் செல்வருந்தான்
பல்வித மாயவர் பயணங்கள் தொடர்கையில்
பண்பாடு வளர்த்திடவே பாங்குடன் ஒரு விழா!

ஆற்றல் மிகுந்தவர்கள் அழகுதமிழ் படித்தவர்கள்
நாற்றங் காலெனவே நல்லபயன் அளிப்பவர்கள்
சாற்றுங் கவிகேட்டுச் சந்தோஷங் கொண்டிடுவீர்
ஏற்றபடி இனிமேல் இதயத்தைத் திறந்திடுவீர்!

---

பாலசண்முகன் என்றிவரை எண்ணாதீர்! கவிதையின்

கோலங் காண்கையில் குணத்தை அறிந்திடுவீர்!
காலந் தந்ததொரு கன்னித்தமிழ்ப் பேச்சாளன்
சீலம் ஞானம் சிறந்திட்ட மரபாளன்
முதுகலை மாணி! முத்தமிழ் ஞானி!
எதுவரை போகுமோ அதுவரை தமிழ்போகும்!
சூர சண்முகனாய்ச் சுழலும் சொற்போரில்
வீரம் காட்டுமவன் விளம்புகவி கேட்போம்யாம்

ஒல்லியாய் உடம்பிருக்கும் உறுதியாய் மனமிருக்கும்
பல்லிசொற் பலனுக்கும் பகிடியாய்த் தமிழிருக்கும்
வெல்லவே முடியாத வேங்கைபோல் பேச்சிருக்கும்
நல்லதோர் தமிழ்மரபில் நாம்காண்மகா லிங்கசிவம்
அள்ளக் குறையாத அருமந்த ஆக்கங்கள்
கொள்ளை இன்பமுறக் குலவிடச்செய் எழுத்தாளன்
பேரனும் தமிழறிஞர்; பிதாவுமோ பெரும்புலவர்
தாரத்தின் தந்தையும் தமிழறிந்த கலைஞரென்றால்
சாரத்தை உள்ளடக்கிச் சலியாத கவிதைதர
நேரத்தைக் கருதியான் நேசமுடன் அழைக்கின்றேன்

நாடறிந்த நல்லதமிழ்ப் பேச்சாளன்; எழுத்தாளன்
பாடல் இயற்றும் பக்குவம் கற்றறிந்தோன்
தேடல் முயற்சிகளால் தேடிய கல்விதான்
சோடை போகாமல் சுடர்விடும் விரிவுரையாளன்
தன்னால் முடிந்தவற்றைத் தமிழால் கொடுத்திடவே
முன்னால் வந்துநிற்கும் முயற்சியுள்ள பேராளன்
மின்னாமல் முழங்காமல் மேடைகளில் சாதிக்கும்
அன்னாரின் கவிதையினை ஆர்வமுடன் கேட்டிடுவோம்!
பண்ணார் தமிழைப் பாயாசமாய் வார்த்திடவே
கண்ணா! லலீசா! கவிதைதர வாராயோ!
வர்த்தகம் கற்பிக்கும் வாலாயம் இவர்க்குண்டு
வரிசையாய் மாணவரின் வாழ்த்துக்கள் பலவுண்டு

கர்த்தரை மேன்மைசெய் சென்பற்றிக் கல்லூரி
கண்டநல் முத்தென்று ரவிகரனைக் காண்பதுண்டு
கலைகளில் நாட்டமும் கதைகளில் தேட்டமும்
நிலையுள்ள பண்பாட்டை நேசிக்கும் ஊட்டமும்
அலைகிற மனத்தினை ஆண்டிடும் வீரமும்
பலவித மாயிவர் பண்பெனக் காணலாம்
ரசிகரா யிருப்பவர் ரசனையின் ருசிபெற
ரவிகரா எழுகவே! கவிதர வருகவே!

பொருளோடு கலைத்துவம் பொருந்திடக் கவிபாடும்
அருளாசி பெற்றநாக சிவசிதம்பரக்கவிஞன்
கருவோடு திருவுடைய கல்விப்பணி அதிபருமாம்
இருள்போக்கி ஒளிவீசும் இவர்கவிதை கேட்டுவிடின்
முன்னொருகால் இவர்யாத்த முழுநிலவுக் கவிதையினை
இன்னவரென் றறியாமல் ஏந்திமனம் நான்மகிழ்ந்தேன்
வைகறையின் விடியல்தனை முகையவிழும் பூக்கள்
வடிவாகச் சொல்லுமென வாகான கவிதந்தார்
அன்னவரை இவ்வரங்கில் அழகுதமிழ்க் கவிபாட
ஆசையுடன் அழைக்கின்றேன்! அருங்கவிதை தந்திடுவீர்!

உடலும் உறுமிவிடும்! உள்ளம் பொருமிவிடும்!
கிழடும் மனங்கிளர்ந்து கிளுகிளுப்புக் கொண்டுவிடும்!
படரும் கொடிபோலே பண்பாட்டுக் கவிபாடச்
சுடரும் தமிழொளியே! சூறாவளி யாய்வருவாய்!
வசீகரா உன்பாட்டுக் கேட்போர்க்கு வயாகரா!
பசிவரா ஆனாலும் பலபேர்க்குக் குஷிதரும்
பக்குவம் அறிந்து பரிமாற வந்திடுக!
மிக்குயர் கவிதை மின்னல்கள் வெட்டிடுக!
ஆறு முகங்கள் அழகுதமிழ்க் கவிதைகளால்
ஊறு கின்றபடி உணர்ச்சிதந்து போனார்கள்!
தேறுமோ தேறாதோ தெரிந்திருக்கும் உங்களுக்கு

வீறுகொண்ட அவர்களின் விடயங்கள் புரிந்திருக்கும்
நீறு பூத்திருக்கும்! நெருப்பும் அங்கிருக்கும்!
சூடு தணிந்திருக்கும்! சுடர்விடவும் வழியிருக்கும்!
ஆடு மாடுகளாய் ஆக்கினைகள் படுவோரின்
அவலம் உறைந்திருக்கும்! ஆத்திரம் மிகுந்திருக்கும்!
நாடும் நலம்பெறவே நாமும் பயன்பெறவே
தேடும் கலாசாரத் தேட்டம் குன்றிடிலோ
கூடுதனை இழந்து கொப்பும் கிடையாமல்
வாடும் பறவைகளாய் வாழ்க்கை முடிந்துவிடும்
கூறும் அறிவுரைகள் கொள்கையிலா மனங்களைத்
தேறும் படி செய்யத் தெய்வமே துணைசெய்வாய்!
வாழும் வழிபலதை வடித்தநற் கவிதைகளில்
ஆளும் படி சொன்ன அரங்கக் கவிஞர்களே!
வீழும் பண்பாட்டை விழுந்திடா வழிசொன்னீர்!
நாளும் நீர்வாழ்க! நன்றியினைக் கூறுகின்றேன்!
காதும் மனமும் கலந்து இன்புறவே
கலாசாரப் பேரவை அளித்த வாய்ப்புக்கும்
காரண கர்த்தாவாம் பிரதேச செயலர்க்கும்
கலந்து மனமகிழ்ந்த கலாரசிகர் பலருக்கும்
ஓதும் நன்றிதனை உவந்தேற்றுக் கொள்ளுங்கள்!
உண்மையிது; பொய்யில்லை; உள்ளத்தால் உரைப்பதுவே!

பண்டைய வாழ்வெமக்குப் பலகாலம் தொடர்ந்திருந்தும்
இன்றைய இழிநிலைமை ஏன்வந்து சேர்ந்ததுவோ?
அண்டைய பண்பாட்டு அவலங்கள் உட்புகுந்து
வண்டுகளாய் அரித்தழிக்கும் வகைவந்த தேனோதான்?
கண்ணகி விரித்த கருங்கூந்தல் காண்பித்த
புண்ணுழைத் தீத்துயரம் புரியாது போனதுமேன்?
விண்ணினை விழித்தே விரிகூந்தல் பெண்கள்பலர்
கண்ணினை விற்றல்லோ சித்திரம் வாங்குகிறார்!

முதுகிலே முற்றவெளி முடியிலே குச்சவெளி
மதுவிலே மயங்குகின்ற மனதிலே ஒட்டைவெளி
அதுவுடன் சிலகாலம்; இதுவுடன் சிலநேரம்;
எதுவுடன் போய்முடியும்? எங்களின் எதிர்காலம்

காற்சட்டை ஆடவர்கள் கட்டையாய்க் குறைக்கின்றார்!
மேற்கொண்டு அரையாகிக் காலாகிக் கடுகாகிப்
போர்கொண்ட வீரர்போல் பொன்னணியை ஒருகாதும்
சீர்கெட்ட தலைமுடியும் சிறப்பென்று நினைக்கின்றார்!

ஒருகாலத் தமிழ்மண்ணின் உயர்வுகளைத் தெரியாமல்
வருங்கால வாழ்வுதனை மனமெண்ணிப் பாராமல்
திருவோடு அருங்கலைகள் திகழ்ந்தமையைப் புரியாமல்
தெருவோடு அலைகின்ற சென்மங்களா யாவோமோ?



மூத்தோரை மதியாமல் முயற்சிகளைப் பண்ணாமல்
காத்தோரை வதைக்காமல் கடவுளையும் காணாமல்
நீத்தாரை நினையாமல் நெஞ்சமெலாம் இளகாமல்
பூத்ததைக் கிள்ளியெறி புயலாகப் போவோமா?

பண்பாடு காத்திடவே பக்குவம் பெற்றிடுவோம்!
அன்போடு கூட்டுறவாய் அனைவரும் வாழ்ந்திடுவோம்!
என்பாடு உன்பாடு என்பதெல்லாம் மறைந்திடவே
நண்போடு உழைத்திடுவோம்! நற்றமிழால் உயர்ந்திடுவோம்

(யாழ்ப்பாணம் - நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கலாசார விழாவின் கவியரங்கத் தலைமையேற்றுப் பாடிய கவிதை)

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் வாழியவே!





**பல்லவி**

வாழிய கொழும்புத் தமிழ்ச்சங்கம் - என்றும்
வளமார் மொழிகாத்து வையம் தனிற்சிறந்து
(வாழிய)

**அனுபல்லவி**

ஆழிசூ ழிலங்கையில் அன்னைத் தமிழினம்
அல்லல் தனைநீக்கி அமைதியுங் கண்டிடவே
(வாழிய)

**சரணங்கள்**

ஆண்டுகள் எழுபத்தைந் தாகிய அரும்பணி
ஆபத்து வேளையில் அடைக்கலந் தரும்பணி
ஈண்டுள நூலகம், படிப்பகம் இணைந்திடும்
இயலிசை நாடக இலக்கியக் களமுடன் (வாழிய)



தலைநகர் தன்னில் தலைநிமிர்ந் தேநின்று
தமிழை வளர்த்திடும் தவத்தினை மேற்கொண்டு
நிலைகுலை யாதபண் பாட்டினைப் போற்றியே
நீணிலந் தனில்தன் பெருமையைச் சாற்றியே (வாழிய)

இனமத பேதமற் றெவரையும் அணைத்துமே
மனமொழி மெய்களால் மாண்புற உதவியே
அனல்புனல் அமரென அத்தனை களம்வென்ற
இனியஎம் தமிழ்மொழி இகமதில் ஏற்றமுற
(வாழிய)

குருவிகள் சேர்ந்திடும் கூட்டினைப் போலவே
கூடிடும் மக்களின் கோவிலைப் போலவே
அருவிகள் இழிதரும் அழகினைப் போலவே
அரியநற் பணிசெய்து ஆனந்த மடைந்துமே
(வாழிய)

**- பவளவிழாவினை ஒட்டிய கவிதை - 2017**

## செந்தமிழ் வீரமணியே!



கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்த
கலைச் செல்வமே!
அற்புத நர்த்தனக் கீர்த்தனா சாகர
அமுத வெள்ளமே!
பொற்புடைத் தேகமும் புலமைசெய் வார்த்தையும்
பொலிந்திட்ட சொரூபமே!
சிற்பர னடியினைச் சேர்ந்திட்ட சிவமணி
செந்தமிழ் வீரமணியே!



---

எந்நாளு மெங்கள் இதயத்தி லிருப்பாய்
இயலிசை வாரிதியே! - உந்தன்
கண்ணாக விளங்கிய கலைப்பணி போற்றுதல்
கடமையாம் எமக்கினியே (எந்நாளு)

வண்டாடுங் குழலி கண்டார்வ முடனே
வடித்தனை குறவஞ்சி! - மயிலையில்
கொண்டாடி யதனைக் குதூகல முற்றார்
குளிர்ந்த துன்நெஞ்சு! (எந்நாளு)

பண்டாரும் மரபைப் படியொற்றி நின்று
படைத்தனை பலபாக்கள்! - அதில்
வண்டார மதுரம் தமிழுடன் தந்தனை
வடமொழி நறும்பூக்கள்! (எந்நாளு)

- 2003 -

## நெஞ்சே நீ ஆறுவாயா?

அழுகின்ற நெஞ்சேநீ ஆறுவாயா? - எங்கள்
ஆடல்வல்லான் வீரமணி அய்யர்தனைப் பிரிந்து

(அழுகி)

தொழுகின்ற பலபேர் துணை யாயிங்கிருக்க - கையில்
மழுவேந்தும் மன்றாடி அடிசேர்ந்தார் தனையெண்ணி

(அழுகி)

வழுவில்லாக் கலைஞானம் வாய்த்திட்ட மகாவித்வான்
வாரிசுகள் பலநூறு வளர்த்திட்ட பேராசான்
பழுதில்லாப் பாமாலை பைந்தமிழில் சூடியவன்
பலகோடித் தமிழ்மக்கள் நெஞ்சமதி லாடியவன்

(அழுகி)



திருமயிலைக் கற்பகத்தின் திருப்பாதம் நாடியவன்
திருக்கே தீஸ்வரத்துக் குறவஞ்சி பாடியவன்
அ!ருளொழுகும் பனுவல்களை ஆக்கிவைத்த அருளாளன்
ஆனந்த பைரவியை அரவணைத்த திருவாளன்

(அழுகி)

மேளகர்த்தா இராகங்களை மெருகேற்றிக் காட்டினான்
மேன்மைமிக்க தாளவகைச் சாகித்தியங்கள் கூட்டினான்
ஆழமிக்க கலைக்கடலில் ஆணிமுத்தை எடுத்தவன்
அழகொழுகத் தமிழணங்கின் ஆரத்திலே பதித்தவன்

(அழுகி)

- 2003

## தாயும் நீயே! தந்தையும் நீயே!






தாயும் நீயே! தந்தையும் நீயே!
தாளாத துன்பம் தவிர்ப்பவன் நீயே!
சேயும் நானே! சோத்தணைப் பாயே!
செகமதில் என்னைக் காத்தருள்வாயே!
ஆரணப் பொருளே! அற்புத அமுதே!
ஆனந்த மயமே! ஐங்கர சொரூபா!
வாரண முகத்தாய்! வல்லபை மணாளா!
வணங்குவார் நெஞ்சில் அமர்ந்திடும் தேவே!
காரண னாகிக் காவிரி ஓடக்
கமண்டலம் கவிழ்த்த கருணையின் கடலே!
ஓங்கார வடிவே! உமையவள் பாலா!
உண்மையும் நீயே! உலகமும் நீயே!
மாங்கனிக் காக மாதா பிதாவினை
மகிழ்வொடு சுற்றிய மகிபனும் நீயே!

- 2016

# மாதுளுவவ சோபித தேரர்



இனவாதக் குளத்தில் பூத்த
சனநாயகத் தாமரையே!
இருள்மண்டிக் கிடந்த நம்
இலங்கைத் திருநாட்டில்
ஒளிகூட்டக் கைவிளக்கை
ஏந்திநின்ற உத்தமரே!
மதவாதம் மண்டிக் கிடந்த மண்ணில்
முளைத்தெழுந்த மனிதருள்ளே
மனிதநேய மகத்துவத்தை வெளிக்காட்டி,
மக்கள் பணிக்காக அயராது போராடி
காவியுடைக்குள்ளே கண்ணியத்தை,
கருணையைக் காப்பாற்றிய
புண்ணியரே!
காலங்காலமாய் ஊட்டி வளர்க்கப்பட்ட
இனமதமொழி பண்பாட்டுக் கருத்தியலால்
ஊட்டம் பெற்றதனைத்தையும் உதறிவிட்டு
போதிமாதவனின் பொன்மொழியே சரணாக,
புதியதொரு பௌத்தனாய்,

அரியதொரு ஆன்மீகப் பிக்குவாய்
யாவரையும் நேசித்த
பெரியமனங் கொண்டவரே!
வெண்ணெய் திரள்கையிலே தாழி உடைந்ததுபோல்
இலங்கைமாதா
விடியலைக் காணுமுன்னே
விளைச்சலைப் பெறமுன்னே
விரைவாக உயிர்நீத்த விந்தையேனோ?
இதுதான் புத்தங் கூறும் வழியென
உலகுக்கு எடுத்துக்காட்டியது
போதுமென நினைத்தீரோ?
ஏதிலிகள், அகதிகள்
ஏராளமாய் இருக்கையிலே
முட்களில் படுக்கை போடுவோர்
முனைப்புடன் செயற்படும்போது
சத்தியம் காத்திட உன்போல்
சாதுரியம் எவர்க்கு வரும்?
நித்தமும் உன்நினைவு நெஞ்சில்
நீங்காது உலகுக்கு ஒளியாய் உயிரளிக்கும்
இலங்கையில் சமாதானம் உருவாகுமானால்
மாதுளுவவ சோபித தேரரின் மகத்தானபணி
கதையொன்றை வருங்கால இலங்கைக்கு
சொல்லி நிற்கும்.

(மாதுளுவவ சோபித தேரரின் மக்கள் பணியைப் போற்றி எழுதியது - **2016**)

## சிலையாக நீயிருக்கலாகுமோ?



*சிலையாக நீயிருக்க லாகுமோ? - எம்*
*நிலைகண்டு இரங்காமை நாம் செய்த பாவமோ?*

*(சிலை)*

*அலைகடலி னோரம் அமர்ந்த மனோன்மணியே*
*அல்லற்படு மடியார்க் கருள்புரிய அடஞ்செய்து*

*(சிலை)*



*சேய்களுக்குத் துன்பமென்றால் தாயணைத்துக் காப்பாளே!*
*செய்தபிழை தனைப்பொறுத்துச் சினந்தணிந்து சேர்ப்பாளே!*
*நோய்களுக்கு மருந்தளித்து நுடங்கிடாமற் செய்வாளே!*
*நூதனமாய் நாம்வருந்த நீயிருந்து பார்ப்பதென்ன?*

*(சிலை)*

*எத்தனையோ பிறவிகளை எடுத்தெடுத்துக் களைத்துவிட்டோம்*
*எண்ணிலாத துயரங்களை எய்தியெய்திக் கழித்துவிட்டோம்*
*இத்தரையில் பிறந்ததனால் என்னசுகம் கண்டுவிட்டோம்?*
*ஈஸ்வரியே! பார்வதியே! எல்லாமும் அறிந்திருந்தும்*


*(சிலை)*

*அன்னையுன் காலடியே அனைவருக்கும் வாழ்வுதரும்*
*அகிலாண்ட நாயகியே! தான்தோன்றி மனோன்மணியே!*
*முன்னைசெய் வினைபோக்கி முழுநிலவாய் அருள்தேக்கி*
*மூடுதிரை தனைநீக்கி வாடுமுயிர் பாராமல்*

*(சிலை)*

- **2017**

## நிலவிடுக நினதுபுகழ் நிலைத்து!



செந்தமிழுஞ் சைவமுந் சேர்ந்துயரப் பாடுபடும்
நந்தமிழர் துயர்தாங்கும் நல்லவரே! - உந்தனுக்கு
"கலாநிதி"ப் பட்டமதைக் கௌரவமாய்த் தந்திட்டார்
நிலவிடுக நினது புகழ் நிலைத்து.



நல்ல மனத்தாலே நாடியசற் குணத்தாலே
எல்லவரும் போற்றுமினிய பேச்சாலே - எல்லையிலாத்
தொண்டின் திறத்தாலே தூயஇறை யருளாலே
இன்றுநீ யடைந்ததிவ் வுயர்வு.

கல்விப் பணியாற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்
கழகம் உவந்தளித்த கனதியிது! - பல்வகையில்
வல்லமை யிழந்தோர் வறுமையில் உழன்றோர்
அல்லல்தீர்த் ததன்பரிசு இது.

நல்லா சிரியர்நீ! நாடுபுகழ் அதிபர்நீ!
உல்லாச வாழ்வையு முதறினீர்! - மெல்லவரும்
தென்றற் காற்றும்நீ! தேடிவரு வோர்க்கெலாம்
மன்றத் தமிழேயுன் மாண்பு.

அழுத கண்ணீரை ஆற்றுவிக்கும் தாயுள்ளம்
உழுத வயல்நிலத்து உயர்பயன்நீ! - பழுதறியாத்
தொண்டிற் சிறந்தமனம் தோல்வியே காணாமல்
என்றென்றும் வாழ்கபல் லாண்டு.

ஆறுமுகம் திருமுருகன் ஆற்றிவரும் மக்கள்பணி
ஊறுகின்ற மணற்கேணி ஊற்றாகும் - வீறுகொண்ட
துர்க்கா தேவிக்குத் துணையான அன்பர்பணி
நிற்காமல் நிலைக்கட்டும் நீண்டு.

கடவுட் பணிக்கென்றே காலமகள் தருவித்த
திடங்கொள் மனங்கொண்ட தியாகமே! - படருலகில்
மனிதர்முன் தெய்வம் மறுபடியும் தோற்றதே
புனிதனுன் சேவையைப் புரிந்து.



**- வலம்புரி 2011 -**

## சாந்திகப் பேரொளியே!

அலைகின்ற மனத்தோர்க்கும் ஆதரவு இழந்தோர்க்கும்
குலைகின்ற வாழ்க்கையிலே குணங்கெட்டுத் திரிவோர்க்கும்
நிலைநின்ற பெருவாழ்வின் நிம்மதியைத் தொலைத்தோர்க்கும்
தலைநின்ற தாயெனவே தழுவியருள் சாந்திகம்!

ஆறுதல் கூறுவதும் அரவணைப்புக் காட்டுவதும்
தேறுதல் இல்லாத தீவினையை மாற்றுவதும்
ஊறுபல நேர்ந்திடினும் உண்மைவழி நடப்பதுவும்
வீறுகொள் மானிடத்தை விளக்குவதும் சாந்திகம்!

இருபத்து ஆண்டுகளாய் இணையற்ற சேவையினை
இடருற்ற யாழ்ப்பாண மக்களுக்காய்த் தந்துதவிப்
பருவத்தே முளைவிட்டுத் தளிர்விட்டுக் கிளைவிட்டுப்
பாங்காக நிழலளிக்கும் பழவிருட்சம் சாந்திகம்!



துயருற்ற மனங்கட்குத் துணிவோடு பணியாற்றும்
துன்பத்தில் பங்கேற்கும் துணைநின்று காப்பாற்றும்
புயலுற்ற படகுகளாய்ப் புனல்மீது தவிப்போர்க்குப்
புதுப்பாதை தனைக்காட்டும் புகலரணே சாந்திகம்!

நோய்நாடி முதல்நாடி நோய்தணிக்கும் வகைநாடி
வாய்நாடிக் குளிர்விக்கும் வார்த்தைகளால் உரையாடி
தாய்நாடிச் சேயினுக்குத் தருகின்ற தண்ணொளியை
ஓய்வின்றி உழைப்பாலே உவந்தூட்டும் சாந்திகம்!

போர்க்காலச் சூழலினால் புண்பட்ட யாழ்ப்பாணம்
புன்னகையை இழந்ததனால் பொலிவிழந்த யாழ்ப்பாணம்
கார்க்கால இருள்கதிரை கௌவுதல்போல் யாழ்ப்பாணம்
கதிகலங்கும் வேளையிலும் கைகொடுக்கும் சாந்திகம்!

மனிதர்கள் மனிதர்களை மதித்திடவே வேண்டுமென
மானிடத்தின் நேயமதே மகத்தான சேவையெனப்
புனிதர்களே எல்லோரும் புன்மைகள் நீங்கிவிட்டால்
புரிந்திடுவீர் எனச்சாற்றும் புரட்சிகரச் சாந்திகம்!

இறைபணியும் உளப்பணியும் இரண்டறவே கலந்துவிட்டால்
இகமதிலே வேறுபணி எதனாலும் பெருமையில்லை
மறைகூறும் வாக்கியங்கள் மண்ணுலகில் மகிமைபெற
மனம்வெளுக்க மருந்துதரும் மாண்புடைய சாந்திகம்!

வழிகாட்டல், ஆலோசனை, வரம்புடைய பயிற்சிகளும்
வகைநிலைமை புரிந்துணரும் வடிவில்செய் திட்டங்களும்
ஒழிவின்றிப் பணியாற்றும் சிலநூறு ஊழியரும்
ஓர்மத்துடன் உழைப்பதனால் உயர்கிறது சாந்திகம்!

பணிவன்பு செய்கடமை பயன்கருதாத் தொண்டுமனம்
பலர்வாழச் செய்கின்ற பக்குவத்தின் அணுகுமுறை
அணிசெய்யும் உளச்சீரின் ஆக்கமதை ஒழுங்காக்கும்
அமைதிதரும் தாய்வீடாம் அன்புவளர் சாந்திகம்!



கடவுளுக்குச் சமமான கருணையுள நெஞ்சங்களும்
காலத்தை வென்றுநிற்கும் காரியத்தின் வெற்றிகளும்
திடமுள்ள மனத்தோடு சேவைபுரி கின்றவரும்
திசைவீசும் தென்றலெனத் திகழுவதும் சாந்திகம்!

சஞ்சலப் படுகின்ற சகலரது மனங்களையும்
சாந்தப் படுத்துகின்ற சாந்திகப் பேரொளியே!
நெஞ்சாரப் பணிசெய்து நீணிலத்தில் நிலைநின்று
நிம்மதியைப் பிறர்க்களித்து நிரந்தரமாய் வாழியவே!

(யாழ்ப்பாணம் சாந்திக நிறுவனத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவில் எழுதப்பட்ட கவிதை - **2008**)



திருநாவுக்கரசு அழகான கிராமத்திலே பிறந்து
வளர்ந்தவர். குன்றா உழைப்பும்,
குறையா ஊக்கமும் உடையவர்.
ஓயாமற் படிப்பவர். ஒழுங்காகப் படிப்பிப்பவர்.
இவர் ஆசிரியராக, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
விரிவுரையாளராக, பல்கலைக்கழக வருகைதரு
விரிவுரையாளராக, சிறந்த ஆய்வாளராக
உச்சத்தைத் தொட்டவர்.
ஆய்வு மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக
அவர் விளங்கியவர். பெருமதி மிக்க
பாடநூல்களை எழுதியவர்.
பழகுதற்கு இனிமையும்,
பண்பும் கொண்ட பண்டிதர் திருநாவுக்கரசு
அவர்களின் "ஒரு முகம்" கவிதைத் துறையாகும்.

- பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

ISBN: 978-955-52960-9-0